விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 27 புதன்கிழமை (09.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 112

# மக்கள் விடுதலை முன்னணி இரண்டு அணிகளாகப் பிளவு

## விமல் வீரவன்ச தலைமையில் 11 எம்.பிக்கள்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) இரு பிரிவுகளாகப் பிளவு பட்டுள்ளது. கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவரும் பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்சவின் தலைமையில் 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிக்குழுவாகச் செயற்படுவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

விமல் வீரவன்ச எம்.பியினை, கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கு கடந்த 27 ஆம் திகதி கூடிய ஜே.வி.பியின் அரசியல் சபை தீர்மானம் எடுத்திருந்தது. இதனையடுத்தே ஜே.வி.பிக்குள் இத்தகைய பிளவு ஏற்பட்டுள்ளது. (02 ஆம் பக்கம் பார்க்க)

## ‘கட்சி என்னைக் கொலை செய்து விட்டது’ நாடாளுமன்றில் விமல் வீரவன்ச கவலை

(கொழும்பு)

கட்சியிலிருந்து விலக்குவதற்கு ஜே.வி.பி தீர்மானித்தமையானது தன்னைக் கொலை செய்வதற்கு சமமானது என ஜே.வி.பி.பிரசார செயலாளரும் நாடாளுமன்ற குழுத்தலைவருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியிலிருந்து அவரை விலக்கத் தீர்மானித்திருப்பது குறித்து நேற்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின்போது விமல் வீரவன்ச இவ்வாறு கூறியிருந்தார்.

இளமைக்காலத்திலிருந்து கட்சிக்காக கடுமையாக உழைத்த தன்னை கட்சியிலிருந்து விலக்குவதற்கு மத்தியகுழு தீர்மானித்திருப்பதாகவும் கிழக்கு மாகாண தேர்தல்வரை தனது ஒத்துழைப்பை பெற்றுவிட்டு அதன் பின்னர் கட்சியிலிருந்து விலக்கத்தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

சாதாரண இளை (10 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இருந்து பிற மாவட்டங்களிற்கு பிரயாணம் மேற்கொள்வதற்கான கப்பல் சேவை இன்று நடைபெறமாட்டாது. அச்சேவை நாளை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் இன்று பிரயாணம் மேற்கொள்வதற்கு பிரயாண அனுமதிப்பத்திரம் (Token) பெற்றவர்கள் பிரயாண ஏற்பாடுகளுடன் நாளை யாழ்.புகையிரத நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (சு)

## நாடாளுமன்றில் ஐ.தே.க. ஆர்ப்பாட்டம் இரு தடவைகள் அமர்வுகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றில் ஐக்கிய தேசியக் கட்சியினால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. நேற்றுக் காலை 10 மணியளவில் நாடாளுமன்றில் பொதுச் செயலாளர் நியமனத்தை எதிர்த்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

நாடாளுமன்றத் துணைப் பொதுச்செயலாளர் தம்பிக்க கிதுள்கொடவின் நியமனம் சட்டவிரோதமானது என்றும் இது தனிப்பட்ட ஒரு நபருக்கான போராட்டம் அல்ல எனவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இதனால் (10 ஆம் பக்கம் பார்க்க)

## விசேட அதிரடிப் படை சூட்டில் 2 இராணுவம் உட்பட மூவர் பலி

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பகுதியில் அமைந்துள்ள காட்டுப்பகுதியில் விசேட அதிரடிப் படையினரால் நேற்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 2 இராணுவத்தினரும் ஒரு சிவிலியனும் கொல்லப்பட்டதுடன் ஒரு இராணுவ வீரர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அப் பகுதியில் அமைந்துள்ள கோமாரி காட்டுப் பகுதியில் விசேட அதிரடிப் படையினரும் இராணுவத்தினரும் தனித்தனியாகத் தேடுதல் நடவடிக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## திரைப்படச் சுருளினை வழங்க ஜெமினி திரைக் கூடம் மறுப்பு

‘பிரபாகரன்’ திரைப்படச்சுருளை அதன் இயக்குநர் பீரிஸிடம் கையளிப்பதற்கு மறுப்புத் தெரிவித்துள்ள் சென்னை ஜெமினி திரைப்படக் கூடம் மத்திய அரசிடமி ருந்து அனுமதி பெற்றுவந்தால் மட்டுமே படச்சுருளை வழங்கமுடியும் எனத் தெரிவித்துள்ளது. இதனால் பீரிஸ் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. படச்சுருளைத் தரலாம் என இந்திய அரசு எழுத்து பூர்வமாக அனுமதி அளித்தால் படச்சுருளை தரமுடியும் என பீரிஸிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் அரசு - புலிகளிடம் ஐ.நா. வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையில் மோதல்களில் ஈடுபடும் இராணுவத்தினரும் விடுதலைப்புலிகளும் தனது அதிகார வரம்புக்குள் செயற்பட்டு பொதுமக்கள் பலியாவதைத் தவிர்க்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போது தொடர்ந்து வரும் மோதலுக்குப் பேச்சுவார்த்தை மூலம் நிலையான அமைதித் தீர்வு காண வேண்டும் என மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினர்களிடமும் வேண்டுகோள் விடுப்பதாக ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா வெலிவேரிய பகுதியில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலு (10 ஆம் பக்கம் பார்க்க)

மிதிவெடி விழிப்புணர்வு தினம் : ஏப்ரல் 1 - 14

சந்தேகத்துக்கிடமான பொருட்களைத் தவிர்ப்போம்.

அவை வெடிபொருட்களாக இருக்கலாம்.

‘சர்வோதயம்’ ‘யுனிசெவ்’

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அடிக்கடி வெளிமாவட்டங்களிற்குச் செல்லும் அரச உத்தியோகத்தர்களின் விபரங்களை அனுப்புமாறு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

அரச சேவைகளின் நிமித்தம் அடிக்கடி வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் உத்தியோகத்தர்களின் பட்டியலை உடனடியாக அனுப்பி வைக்குமாறு அரச திணைக்களங்களை யாழ்.அரச அதிபர் க.கணேஷ் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியினால் அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ் மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் அலுவலர்கள் வெளிமாவட்டங்களுக்கான பயண அனுமதியினைப் பெறுவதற்குரிய புதிய நடைமுறையானது மார்ச் மாதம் 24ஆம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந் நடைமுறைக்கு ஏற்ப மாவட்ட செயலகத்திற்கு தமது விபரங்களை அனுப்பிய அரச திணைக்களங்களின் தலைவர்களினதும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகளினதும் மாதிரிக் கையொப்பமும் அத்திணைக்களங்கள் நிறுவனங்களில் கடமையாற்றும் அலுவலர்களின் பெயர்ப்பட்டியலும் யாழ். மாவட்ட இராணுவ கட்டளையிடும் தளபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது அனுமதிப்பத்திரங்களை நேரடியாக குறிப்பிட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கலாம்.

வெளிமாவட்டத்திற்கு பயணத்தினை மேற்கொள்ளவிரும்பும் அலுவலர்கள் அதற்கென வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து தமது அரச திணைக்களங்களின் தலைவர்களின், அரச சார்பற்ற நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகளின் கையொப்பத்தினைப் பெற்று யாழ். மாவட்ட சிவில் நிர்வாக அலுவலகத்தில் சமர்ப்பித்து அனுமதியினை பெறமுடியும் என்பதனை அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அதிகளவிலான உத்தியோகத்தர்களைக் கொண்டுள்ள அரச திணைக்களங்கள் அரச சேவை நிமித்தம் அடிக்கடி சென்று வருகின்ற உத்தியோகத்தர்களின் பட்டியலை உடனடியாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்வதுடன் ஏற்கனவே அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினால் அனுப்பி வைக்கப்பட்ட திணைக்களத் தலைவரின் மாதிரிக் கையொப்பத்தில் மாற்றம் ஏற்பட்டிருப்பின் அதனையும் உடனடியாக தெரிவிக்குமாறு கேட்டுள்ளார். (சு)

# க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகள்-2007

**சென்.ஜோன்ஸ் கல்லூரி**

சந்திரகுமார் மேனன் (10ஏ); பரராஜசிங்கம் சுஜீவன் (10ஏ); சிறிதரன் தாருகாஸ் (10ஏ) பஞ்சலிங்கம் தீவதரன் (9ஏ,பி); சிவபாலன் கௌசல்யன் (9ஏ,சி); சேதுராஜன் நிரூபரன் (9ஏ,சி); சிவகுமார் கௌதமன் (9ஏ,எஸ்); பாலச்சந்திரன் துஸ்யந்தன் (9ஏ,எஸ்).

மகேஸ்வரன் அஜந்தன் (8ஏ,2பி); இரட்ணானந்தன் பேரானந்தரூபன் (8ஏ,பி,சி); பஞ்சநாதன் தர்சன் (8ஏ,பி,சி); கந்தசாமி உபமஞ்சு (8ஏ,பி,சி); ஜோசெப் அன்ரனி யோய் சுபைசன் (8ஏ,பி,சி); ஈஸ்வரகாந்தா கஜேந்திரா (8ஏ,2சி).

மனோகரன் துவாரகன் (7ஏ,3பி); தர்மகுலசிங்கம் ஜெயப்பிரகாஸ் (7ஏ,பி,2சி) ; ராமசாமி கௌதமன் (7ஏ,பி,சி,எஸ்); தில்லைநாதன் அரவிந்தன் (7ஏ,பி,சி,எஸ்) ; மகேந்திரன் அமிழ்தன் (7ஏ,பி,சி,எஸ்); புஸ்பரட்ணம் அபிதன் (7ஏ,பி,சி,எஸ்).

அருணகிரிநாதன் வஜீரன் (6ஏ,4பி); எட்வின் பீரிஸ் மிதுர்சனன் (6ஏ,3சி,எஸ்); சிவகுமார் சிவதர்சன் (6ஏ,3சி,எஸ்) ; விஸ்வநாதன் புவிராஜன் (5ஏ,3பி,2சி); பாலச்சந்திரன் தனுஜன் (5ஏ,3பி,சி,எஸ்); சஸ்ருதன் சேரன் (5ஏ,2பி,3சி); தர்மேந்திரன் ஹம்சர்த்வன் (5ஏ,2பி,2சி); சிவதாசன் நிலக்ஷன் (5ஏ, 2பி,சி,எஸ்). சிறிதரன் பிரியதர்சன் (5ஏ,2பி, 2சி,எஸ்); புஸ்பராஜா சாருஜன் (5ஏ,பி,3சி, எஸ்); ரவீந்திரகுமாரன் சங்கரன் (5ஏ,3சி,எஸ்).

**யாழ்/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை -வல்வெட்டித்துறை**

நா.நிரூஜா (9ஏ,பி); கு.ஜெனதன் (2ஏ,2பி. 3சி,3எஸ்) ப.ஜெனோசா (3ஏ,பி,சி,5எஸ்); கு.றமீனா (2ஏ,பி,3சி,4எஸ்); வ.மதுசா (2ஏ, 2பி,2சி,3எஸ்) த.சாந்தசொரூபன் (ஏ,2பி, 2சி,5எஸ்). (சு)

## க.பொ.த (சா/த) 2007 முடிபுகள்-பகுப்பாய்வு
## யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி

| பாடம் | தோற்றிய மாணவர்கள் தொகை | A | B | C | S | W | சித்திவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| சைவ சமயம் | 227 | 157 | 39 | 24 | 07 | - | 100% |
| தமிழ் மொழியும் இலக்கியமும் | 227 | 158 | 43 | 23 | 04 | - | 100% |
| ஆங்கிலம் | 227 | 26 | 33 | 60 | 65 | 44 | 80.7% |
| விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும் | 227 | 18 | 31 | 82 | 60 | 36 | 84 % |
| கணிதம் | 227 | 52 | 44 | 66 | 47 | 18 | 92 % |
| சமூகக்கல்வியும் வரலாறும் | 227 | 80 | 60 | 50 | 30 | 07 | 97 % |
| **அழகியல் பாடம்** | | | | | | | |
| சங்கீதம் | 89 | 46 | 16 | 18 | 06 | 03 | 97% |
| பரத நாட்டியம் | 82 | 43 | 15 | 16 | 07 | 01 | 99% |
| சித்திரம் | 56 | 02 | 05 | 13 | 29 | 07 | 91% |
| **தொழினுட்பப் பாடம்** | | | | | | | |
| தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் | 09 | 07 | 02 | - | - | - | 100% |
| வர்த்தகமும் கணக்கியலும் | 140 | 27 | 33 | 50 | 23 | 07 | 95% |
| விவசாயம் | 46 | 03 | 07 | 21 | 14 | 01 | 98% |
| மனைப்பொருளியல் | 32 | 01 | - | 20 | 09 | 02 | 94% |
| **மேலதிக பாடம்** | | | | | | | |
| ஆங்கில இலக்கியம் | 05 | - | 01 | 03 | 01 | - | 100% |
| தமிழ் இலக்கியம் | 222 | 63 | 60 | 70 | 25 | 04 | 98% |
| சுகாதாரமும் உடற் கல்வியும் | 188 | 72 | 66 | 44 | 05 | 01 | 99% |
| புவியியல் | 39 | 03 | 11 | 18 | 05 | 02 | 95% |

தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை - 227

க.பொ.த (உ/த) வகுப்பிற்கு தகுதி பெற்றவர்கள் 209 (சு)

# விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப்பிரதேச செயலக வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகி நாளை மறுதினம் வரை மூன்று நாட்கள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது. இவ்விளையாட்டுப்போட்டிகள் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் நடைபெறுகின்றது. (அ-5)

# இலங்கை வங்கிக் கிளைகளில் எதிர்வரும் 11ஆம் திகதி மட்டுப்படுத்தப்பட்ட சேவை

(யாழ்ப்பாணம்)

சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்ட இலங்கை வங்கிக் கிளைகள் காலை 8.30 மணி தொடக்கம் காலை 10.30 மணிவரையும் மட்டுமே செயற்படும் என இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

அதேவேளை புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கல்கள் 14ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும் என அவர் தெரிவித்துள்ளார். (சு)

# யோகாசன வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார திணைக்களத்தினால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இலவச யோகாசன வகுப்புகள் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 8 மணிக்கு அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்புவோர் தங்களது பெயர்களை நாவலர் மணி மண்டபத்தில் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-6)

# தகவல் தொழில்நுட்பப் பாடத்தில் சென்.ஜோன்ஸில் நூறுவீதச் சித்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்.ஜோன் கல்லூரியில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப (Information Communication Technology) பாடத்தில் 100 வீத சித்தி பெற்றுள்ளதாக அதிபர் வண. பிதா என்.ஜே.ஞானபொன்ராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடந்த வருடம் அறிமுகம் செய்யப்பட்ட அப்பாடத்திற்கு 27 மாணவர்கள் தோற்றினர். இவர்களில் 19பேர் ஏ சித்தியும் 5பேர் பி சித்தியும் ஒருவர் சி சித்தியும் இருவர் எஸ் சித்தியும் பெற்றுள்ளதாக அதிபர் தெரிவித்துள்ளார். (சு)

# சிறுவர் முகாம்

(யாழ்ப்பாணம்)

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சிறுவர் முகாம் நாளை காலை 8.30 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ் கல்விவலய விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.சந்திரிகா அறிவித்துள்ளார்.

இம்முகாமில் பங்குபற்றவுள்ள மாணவர்களும் பெற்றோர்களும் இவ்வறிவித்தலை ஏற்று ஒத்துழைக்குமாறு அவர் கேட்டுள்ளார். இச் சிறுவர் முகாம் 6ஆம் திகதி நடைபெற விருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

# கட்டடத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்புவிழா நாளை நண்பகல் 12.00 மணிக்கு கல்லூரி அதிபர் வீ.கணேசராசாவினால் திறந்து வைக்கப்படவுள்ளது. (சு-2)

# மக்கள் விடுதலை முன்னணி...

கட்சிப்பதவியிலிருந்து தன்னை விலக்க அரசியல் சபை முடிபெடுத்துள்ளதாகவும் இதற்கு ஒருபோதும் அடிபணியப்போவதில்லை என்றும் விமல் வீரவன்ச எம்.பி.நேற்று முற்பகல் விசேட உரையாற்றியிருந்தார்.

இதன்மூலம் கட்சிக்குள் முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்பதை விமல் வீரவன்ச பகிரங்கப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து சிலமணி நேரங்களில் கொழும்பில் செய்தியாளர் மாநாடொன்றினை விமல் வீரவன்ச எம்.பி.க்கு சார்பான நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்தியதுடன் விமலின் தலைமையில் தனிக்குழுவாக இயங்கப்போவதாகவும் அறிவித்துள்ளனர்.

கொழும்பு நிப்போன் ஹோட்டலில் நடைபெற்ற இந்த செய்தியாளர் மாநாட்டுக்கு ஜே.வி.பி.யின் களுத்துறை மாவட்ட எம்.பி பியசிறி விஜேநாயக்க தலைமை தாங்கினார்.

அவரது தலைமையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் 11 எம்.பி.க்கள் கலந்து கொண்டனர்.

இதில் கலந்துகொண்ட அநுராதபுரம் மாவட்ட எம்.பி.ரணவீர பத்திரன ஜே.வி.பி. தலைமைக்கு ஆதரவாக பேசியமையினால் பொலிஸ் உயரதிகாரிகளின் உதவியுடன் செய்தியாளர் மாநாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

இதனையடுத்து விமல் வீரவன்சவுக்கு ஆதரவாக 10 எம்.பி.க்கள் கருத்துத் தெரிவித்தனர்.

பியசிறி விஜேநாயக்க, மொகமட் முகாமில், சமன்சிறி ஹேரத், உதயசாந்த குணசேன, சுஜாத்தா அழகக்கோன், வீரகுமார திஸநாயக்க, அச்சல ஜாகொட, ஜயந்த சமரவீர, தீபால் குணசேகர, பிமல் பிரேமவன்ச ஆகிய 10 பேரும் விமல் வீரவன்சவுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்தவர்களாவர்.

ஜே.வி.பி.க்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காணப்படும் வரை விமல் வீரவன்சவின் தலைமையில் தனிக் குழுவாக செயற்பட தீர்மானித்துள்ளோம் என்று இங்கு கருத்து தெரிவித்துள்ள பியசிறி விஜேநாயக்க தெரிவித்தார்.

விமல் வீரவன்ச கட்சியில் வகித்த பதவிகள் அனைத்திலுமிருந்து சூழ்ச்சியின் காரணமாக விலக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கட்சிக்குள் பேசித் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அத்தகைய சூழல் ஏற்படவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

செய்தியாளர் மாநாட்டில் பிஜயசிறி விஜேயநாயக்க எம்.பி மேலும் கூறியதாவது,

கட்சிக்குத் தீங்கு விளைவிக்காத நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு எதிராக கட்சியின் சில உறுப்பினர்களால் சில சூழ்ச்சிகரமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அவரால் கட்சியில் பிரச்சினைகள் எதுவும் ஏற்பட்டிருப்பின் அப்பிரச்சினை குறித்து கட்சிக்குள்ளேயே பேசித் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

அவ்வாறானதொரு நடைமுறையினைக் கையாளாது அவர் வகித்த பதவிகளிலிருந்து அவருக்கே தெரியாது நீக்குவதென்பது கட்சிக்கு விளைவிக்கும் தீங்கேயாகும்.

கட்சிக்குள்ளேயே பல முரண்பாடுகள் காணப்படுமாயின் அம்முரண்பாடுகளைப் பயன்படுத்தி ஏனைய கட்சியினர் பயனடைவர். இவ்வாறான சந்தர்ப்பத்தினையே தற்போது கட்சியின் சில உறுப்பினர்கள் வழங்கியுள்ளனர்.

இவ்விடயம் குறித்து கட்சி உறுப்பினர்களாகிய எமக்குக் கூட அறிவிக்கப்படவில்லை. நான் கட்சியின் உறுப்பினர்கள் சார்பில் ஜே.வி.பியின் செயலாளரிடம் பேசும் போதும் அவர் அதற்குரிய பதிலை எமக்கு வழங்கவில்லை.

இவ்வாறு அவர்கள் பொறுப்பற்றுச் செயற்பட்டால் கட்சியைத் தொடர்ந்து கொண்டு செல்வது மிகக் கஷ்டமேயாகும். ரோகண விஜேவீர கஷ்டப்பட்டு உழைத்து உருவாக்கிய கட்சியை சிலரின் சூழ்ச்சிக்கு அடிபணியவிட்டு வீணாக்க நாம் ஒருபோதும் விடமாட்டோம்.

அதனால் கட்சியின் கொள்கைகளையும் கட்சியினையும் தொடர்ந்து காப்பாற்றவே நாம் தனித்து இயங்கத் தீர்மானித்துள்ளோம். நாடாளுமன்றத்தில் விமல் வீரவன்ச எம்.பி ஆற்றிய உரை குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

இது குறித்து ஒரு தீர்க்கமான முடிபு கிடைக்கும் வரையில் தொடர்ந்தும் தனித்து இயங்குவோம். கிழக்கு மாகாணத்தில் பிள்ளையான் குழுவிடமிருந்து ஆயுதங்கள் களையப்படவேண்டுமென ஜே.வி.பித் தலைவர் சோமவன்ச அமரசிங்க கருத்துத் தெரிவித்திருந்தார்.

ஆனால் பிள்ளையான் குழுவிடமிருந்து தற்போதைக்கு ஆயுதங்களைக் களையக் கூடாது என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளருமான விமல் வீரவன்ச கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதனாலேயே ஜே.வி.பி தலைமைப்பீடத்திற்கும் விமல் வீரவன்சவுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த முரண்பாடு தற்போது முற்றி கட்சி பிளவுபட்டுள்ளது. (சு-2.5)

# இன்று ஒரு தகவல்

## உள்ளே இருக்கிற உண்மை!

கடவுள் இந்த உலகத்தைப் படைத்துவிட்டு கொஞ்ச நாள் இங்கேயே தங்கியிருந்தாராம். அப்போது தான் அவருக்குப் புரிந்ததாம். இந்த உலகத்திலே தங்கியிருப்பது எவ்வளவு இடைஞ்சல் என்று. தினமும் மனிதர்கள் கடவுளைத் தேடிவந்து ஏதாவது புகார் சொல்லிக் கொண்டே இருந்தார்களாம். எனக்கு அது வேண்டும்; இது வேண்டும் என்று கேட்டுக்கொண்டே இருந்தார்களாம்.

சில பேர் வந்தார்கள். நாங்கள் விவசாயம் செய்கிறோம். தண்ணீர் இல்லாமல் பயிர் காய்கிறது. எங்களுக்கு மழை வேண்டும் என்று கேட்டார்கள். வேறு சிலர் வந்தார்கள். நாங்கள் பானை, சட்டி செய்பவர்கள். நிறைய பானை, சட்டி செய்து வைத்திருக்கிறோம். அவை காய்வதற்கு முன் மழைவந்தால் எல்லாம் கரைந்து விடும். அதனால் இன்று மழைபெய்யக்கூடாது என்றார்கள்.

அவர்கள் மழைவேண்டும் என்று கேட்கிறார்கள். இவர்கள் மழைவேண்டாம் என்கிறார்கள். கடவுளுக்கு என்ன செய்வ தென்றே தெரியவில்லை. ஏகப்பட்ட குழப்பம். தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல இருந்தது. கிட்டத்தட்ட பைத்தியம் பிடிக்கிற அளவுக்கு ஆகி விட்டது. எல்லாருடைய ஆசையையும் அவரால் நிறைவேற்ற முடியவில்லை. ஏனென்றால் ஒன்றுக் கொன்று முரண்பாடாக இருந்தது.

ஒருநாள் தன்னுடைய அமைச்சரவையைக் கூட்டி ஆலோசனை கேட்டார். "என்ன செய்யலாம்? சொல்லுங்கள்" என்றார். "பேசாமல் இமயமலை அடிவாரத்திலே போய் உட்கார்ந்து கொள்ளுங்கள். யாரும் தொந்தரவு செய்ய மாட்டார்கள்" என்றார்கள். "அங்கேயும் மனிதர்கள் வர ஆரம்பித்து விடுவார்களே!" என்றார் கடவுள்.

"சந்திரனில் போய் இருக்கலாமே" என்றார்கள். "அங்கேயும் மனிதன் குடியேறப் போகிறானே" என்றார் கடவுள். வெகு தூரத்துக்கு அப்பாலுள்ள நட்சத்திர மண்டலத்துக்குப் போய்விடலாம் என்றார்கள். "இவையெல்லாம் நிரந்தர தீர்வு ஆகாது. நிரந்தரமாக இந்த மனிதர்களுடைய தொல்லையில் இருந்து நான் விடுபடவேண்டும். அதற்கு ஏதாவது வழி சொல்லுங்கள் என்றார் கடவுள்.

ஒரு வயதான ஆள்வந்தார். கடவுளுக்கு காதோடு காதாக ஒரு வழியைச் சொன்னார். கடவுளின் முகம் மலர்ந்தது. "அதுதான் சரி! அப்படியே செய்யலாம்!" என்றார். அந்த ஆள் சொன்ன ரகசியம் என்ன தெரியுமா? "மனிதனால் அடைய முடியாத ஓர் இடம் இருக்கிறது. அது வேறு எங்கும் இல்லை. அவனுக்கு உள்ளேயே இருக்கிறது. அங்கே போய் மறைந்து கொள்ளுங்கள் அதன் பிறகு உங்களுக்குத் தொந்தரவே இருக்காது."

மனிதன் நினைக்காத இடம் அதுதான். உள்ளுக்குள் இருக்கிற உண்மையைப் புரிந்துகொள்ளாமல் வெளியே எங்கேயோ அது இருப்பதாக நினைத்து மனிதன் அலைந்து கொண்டே இருக்கிறான்.

உள்ளே இருக்கிற உண்மை புரிந்தால் நாம் தன்னம்பிக்கையோடு தலை நிமிர்ந்து வாழலாம். வேடிக்கையாக ஒரு கதை சொல்வார்கள். "இதோ பாருங்க... நம்ம பையன் எங்கே பணம் வைத்தாலும் எடுத்துவிடுகிறான். என்ன செய்வது?" என்றாள் அம்மா. அப்பா கொஞ்ச நேரம் யோசனை செய்தார். அதன் பிறகு சொன்னார்; "அவன் கண்ணில்படாத இடம் நமது வீட்டிலே ஒரே ஒரு இடம் தான். அங்கே பணத்தை வை. திருட்டுப் போகாது"

"அது எந்த இடம்? என்று கேட்டாள் அம்மா "அது தான் அவன் பாடப்புத்தகம். அதற்குள் வை... அதை அவன் தொடவே மாட்டான்! என்றார் அப்பா.

பாடப்புத்தகத்தைத் தொடாமல் பரீட்சையிலே வெற்றி பெற முடியாது! உள்ளே இருக்கிற உண்மையைத் தொடாமல் வாழ்க்கையில் வெற்றிபெற முடியாது?

பாடங்களை ஒழுங்காகப் படிக்காமல் இருந்துவிட்டு பிள்ளையாருக்கு நூறு தேங்காய் உடைப்பதாக வேண்டிக் கொண்டால் பரீட்சையில் சித்தியடைய முடியுமா?

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# பாராளுமன்ற உறுப்பினர்களின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக்கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகளில் ஏற்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரின் வெற்றிடங்களை இவ்வாரத்திற்குள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளேமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ் தேசியக்கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவநேசனுக்கான வெற்றிடம், ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் திகாமடுமல்ல மாவட்டத்திலிருந்து தெரிவான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீம் தனது உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தமையினால் ஏற்பட்டுள்ள வெற்றிடம், குண்டுத்தாக்குதலில் பலியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் வெற்றிடம் என்பனவே நிரப்பப்படவுள்ளன.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் சார்பில் சிவநேசனின் வெற்றிடத்திற்கு சொலமன் சிறிலும், ரவூப் ஹக்கீமின் வெற்றிடத்திற்கு ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் திகாமடுல்ல மாவட்டத்திலிருந்து எம்.நவ்சாத்தும், ஜெயராஜின் வெற்றிடத்திற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் கம்பகா மாவட்டத்திலிருந்து பந்துல பெரேரா விஜேசேகர ஆகியோர் தெரிவு செய்யப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-5)

# உலக சுகாதார தினத்தையொட்டி சித்திர, சுவரொட்டிப் போட்டிகள்

(அல்வாய்)

உலக சுகாதார தினத்தையொட்டி தேசிய சுவரொட்டி மற்றும் சித்திரப் போட்டி நடைபெறவுள்ளது. 2008 ஆம் ஆண்டு உலக சுகாதார தினத்தை கொண்டாடுமுகமாக சுகாதார கவனிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சு கல்வி அமைச்சுடன் இணைந்து பாடசாலை மாணவருக்கும் ஏனையோருக்குமான சுவரொட்டி மற்றும் சித்திரப் போட்டிகளை ஒழுங்கு செய்துள்ளது.

போட்டிகள் பற்றிய விபரங்கள் வருமாறு,

பிரிவு I

(சித்திரப்போட்டி)

10 வயது முதல் 12 வ்யதுவரையானோருக்கு

தலையங்கங்கள்

1. சுற்றுப்புறச் சூழலின் அழகு.
2. மரம் நாட்டுவதால் சூழலைப் பாதுகாப்போம்.
3. மரங்களும் இலைகளும் எம்மைப் போன்றவையே.

சித்திரத்தாளின் அளவு 18X14 அங்குலம்.

ஊடகம்:- நீர்வர்ணங்கள், கிரயோன், பஸ்டல் (ஒட்டாத தன்மையுள்ள வர்ணம்)

பிரிவு II

13வயது முதல் 15வயதுவரை

தலையங்கம்

1. சூழலைப் பாதுகாப்போம்.
2. அதிவெப்பமற்ற உலகம்
3. உரிய முறையில் கழிவுகளை அகற்றுவதன் மூலம் சூழலைப் பாதுகாப்போம்.

சித்திரத் தாளின் அளவு:- 18X14 அங்குலம்.

ஊடகம்:- நீர்வர்ணங்கள், கிரயோன், பஸ்டல் (ஒட்டாத தன்மையுள்ளவர்ணம்)

சுரொட்டிப் போட்டி

பிரிவு I

16வயது முதல் 19வரை

1. நல்லாரோக்கியத்திற்கு கழிவுகளற்ற சூழலே வழியாகும்.
2. இயற்கைப் பசளையுடனான பயிர்ச்செய்கையே எம்மையும் நாட்டையும் பாதுகாக்கும்.
3. காலநிலை சவால்களை வெல்வோமா அல்லது கூட்ப் போகிறோமா.

ஊடகம்:- நீர்வர்ணம், எண்ணெய் தீந்தை, சுவரொட்டி தீந்தை.

சுவரொட்டி அளவு:- 24X18 அங்குலம்.

பிரிவு II

19வயதுக்கு மேல்

1. இயற்கை சக்தியை வீணாக்குவதைக் குறைப்போம்.
2. எளிமையான வாழ்வு சூழலை பாதுகாக்கும்.
3. நல்லாரோக்கியத்திற்கு நல்ல சூழல்.

ஊடகம்:- நீர் வர்ணம், எண்ணெய் தீந்தை, சுவரொட்டி தீந்தை.

சுவரொட்டி அளவு:- 24X18 அங்குலம்.

போட்டிகள் பற்றிய பொது நிபந்தனைகள்

1. சித்திரத்துக்கோ, சுவரொட்டிக்கோ எந்தவிதமான கடதாசியையும் பாவிக்கலாம்.
2. ஒரு போட்டியாளர் இரு சித்திரங்களையோ அல்லது இரு சுவரொட்டிகளையோ அனுப்பலாம்.
3. சுவரொட்டிகளில் படங்களையோ, நிழற்படங்களையோ உபயோகிக்கலாம்.
4. அனுப்பப்படும் ஆக்கங்கள் தொலைந்து போவதற்கோ அன்றி தாமதமாகக் கிடைப்பதற்கோ பொறுப்பேற்கப்படமாட்டாது.
5. அனுப்பப்பட்ட சித்திரம் அல்லது சுவரொட்டிகள் சுகாதார, கல்விப் பணியகத்தின் உரிமையாகும்.
6. இறுதித் தீர்மானத்தை நீதிபதிகள் குழுவே மேற்கொள்ளும்.
7. சித்திரங்கள் அல்லது சுவரொட்டிகளின் மறு புறத்தில் பின்வரும் தகவல்கள் தரப்பட வேண்டும்.

I உரிய போட்டியாளரின் பெயரும் வ்யதும்.

II பாடசாலையும் வகுப்பும்

III விலாசம்

Iv பாடசாலை போட்டியாளராயின் பாடசாலை அதிபரினால் போட்டியாளரின் அடையாளம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

ஏனைய போட்டியாளர்கள் அவ்வப் பிரிவு கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்படவேண்டும். போட்டிகள் இம்மாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

மேற்குறிப்பிட்ட சித்திரங்கள், சுவரொட்டிகள் யாவும் பணிப்பாளர் சுகாதாரக் கல்விப் பணிமனை, இல 2. கின்சி வீதி, கொழும்பு 8 என்ற விலாசத்திற்கு 07-06-2008ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேலும் ஒவ்வொரு பிரிவிலும் தலா 10 ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். இப்போட்டிக்கு வலய கல்வி அலுவலக ரீதியில் அதிக போட்டியாளர்களை பங்குபற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றது.

வகுப்பு 1முதல் 5வரை, வகுப்பு 6முதல் 8வரை வகுப்பு 9-13 வரை பாடசாலை மாணவர்களுக்கான சுகாதார கவனிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சு 2008ஆம் ஆண்டின் உலக சுகாதார தின தொனிப் பொருளுக்கு அமைவாக தகவல்களைத் தயாரித்துள்ளது. உலக சுகாதார தினத்தன்று பாடசாலை மாணவர்களின் உளப்பாங்கை விருத்திசெய்ய இத் தகவல்களை உபயோகப்படுத்துமாறு கலைப்பகுதி கல்விப் பணிப்பாளர் துசாரா குணதிலக அறிவித்துள்ளார். (ஓ-19)

# இராசிபலன்

09.04.2008
(பங்குனி 27, புதன்கிழமை)
கார்த்திகை மாலை 05.30 மணிவரை
சதுர்த்தி பின்னிரவு 12.47 மணிவரை
இராகுகாலம் 12.06-01.36 மணிவரை
சுபநேரம்-04.39-06.06 மணிவரை
சக்தி கணபதி சதுர்த்தி விரதம்

| | |
|---|---|
| மேடம் | வெகுமானம், கௌரவமான நிலை, நல்ல முயற்சி, போசனசுகம். |
| இடபம் | சோம்பல் நிலை, தனவிரயம், சுப செலவு, காரிய இடையூறு. |
| மிதுனம் | தனதானிய சேர்க்கை, தெய்வதரிசனம், சுபகாரியம். |
| கடகம் | பெரியோரால் மதிக்கப்படுதல், இஷ்டசித்தி, நன்கொடை. |
| சிங்கம் | அதிக செலவு, சரீரப்பிரயாசை, கட்டுப்பாடு, நிலைமாற்றம். |
| கன்னி | அஜீரணக் கோளாறு, பொருள் விரயம், காரியதாமதம், கலகம். |
| துலாம் | பணக்குறைவு, அஜீரண ரோகம், காரிய இடையூறு. |
| விருச்சிகம் | மனமகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி, பகைவர் நேசம். |
| தனுசு | பணக்குறைவு, அஜீரண ரோகம், காரிய இடையூறு. |
| மகரம் | மனச்சஞ்சலம், தனவிரயம், தெய்வசிந்தை, முயற்சி தாமதம். |
| கும்பம் | நற்கீர்த்தி, தேகநலன், அதிக பிரயாசை, காரிய அனுகூலம். |
| மீனம் | சோம்பல் நிலை, சுபகாரியச் செலவு, கௌரவக்குறைவு. |

வளவன்

# பாடசாலை விடுமுறை

கல்வியமைச்சின் கீழ் இயங்கும் அரசாங்கப் பாடசாலைகளினது முதலாந் தவணைக்கான விடுமுறை இன்று கல்வி நடவடிக்கையுடன் வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

தமிழ், சிங்களப் பாடசாலைகளினது இரண்டாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் இம்மாதம் 21ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் ஓகஸ் மாதம் 21ஆம் திகதி திங்கட்கிழமை நிறைவடையவுள்ளன.

இந்த ஆண்டின் இராண்டாந் தவணைக் கல்வி நடவடிக்கைகளுக்கான முஸ்லிம் பாடசாலைகள் எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திறக்கப்படவுள்ளன. (ஓ-7)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

செல்வசந்நிதி ஆலயச்சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப்பெறும் ஆன்மீக நிகழ்வு தொடரில் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணியளவில் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ஓ-35)

* * *

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 மணி பூசை முடிவுற்றதும் "மானிட வாழ் வில் இராமன்" என்னும் விடயம்பற்றி யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கோ.கோகிலதரன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். அதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (ஓ-35)

## மீனவர்களுக்கு புதிய அடையாள அட்டை

(குருநகர்)

குருநகர் கடற்றொழிலாளர்களுக்கு கடற்படையினரால் புதிதாக மீனவர் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதாக குருநகர் கடற்தொழிலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் கடற்படையினரால் குருநகர் கடற்றொழிலாளர்களின் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. புதிதாக தொழிலுக்கு செல்ல விரும்புபவர்கள் இப்புகைப் படத்தை உடனடியாக எடுக்குமாறு குருநகர் கடற்தொழில் சங்கங்கள் கேட்டுள்ளன. (அ)

## சப்பற வெள்ளோட்டம்

நல்லூர் பண்டாரக் குளம் மருதவளவு அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் வருடாந்த உற்சவகாலங்களில் விநாயகர் பவனி வர புதிதாக அமைக்கப்பெற்ற சப்பற வெள்ளோட்ட வைபவம் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வரின் ஆசியுரையும், சிவபூமி அறக்கட்டளை தலைவர் ஆறு திருமுருகனின் சிறப்புரையும் இடம் பெறவுள்ளது. (ஓ)

## சத்துணவு விநியோகம்

"வலி-கிழக்கு பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளில் கற்கும் மாணவர்களுக்கான சத்துணவு விநியோகம் (ஜீவாகாரம், சீனி) நாளை வியாழக்கிழமை, காலை 9.30 மணிக்கு வலி கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் இடம்பெறும். அன்றைய தினம் முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் தவறாது வருகை தந்து பெற்றுக் கொள்ளுமாறு வலி கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்." (ஓ)

## கட்டடத் திறப்பு விழா

யாழ்.இந்துக்கல்லூரி ஸ்ரீ ஞானவைரவப் பெருமானின் மணவாளக் கோல நன்நாளான நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் நிர்மாணிக்கப்பெற்ற கட்டடத் தொகுதி கல்லூரி அதிபர் வீ.கணேசராசாவால் திறந்து வைக்கப்படவுள்ளது. (அ-7)

# வடமராட்சி கல்வி வலயத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான அபிவிருத்திச் செயலமர்வுகள்

(பருத்தித்துறை)

நாளை வியாழக்கிழமை முதல் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையான காலப்பகுதியில் வலயக்கல்வி அலுவலகப் பிரிவு ஆசிரியர்களுக்கான பல்வேறுவகையான அபிவிருத்திச் செயலமர்வுகளை வடமராட்சி வலயக் கல்வியலுவலகம் நடாத்தவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா சகல அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார். இச் செயலமர்வுகளுக்கு பொருத்தமான ஆசிரியர்களை அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

நாளை வியாழக்கிழமை தரம் 9இல் புவியியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் ஆற்றலை மேம்படுத்தும் செயலமர்வு நெல்லியடி ஆசிரிய நிலையத்திலும், 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை தரம் 9 இல் குடியியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் ஆற்றலை மேம்படுத்தும் செயலமர்வு நெல்லியடி ஆசிரிய நிலையத்திலும் அதே தினம் 10, 11ஆம் தரங்களில் தகவல் தொழில்நுட்பம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயற்திட்ட முன் மொழிவுகள் தயாரித்தல் செயலமர்வு வடமராட்சி வலய கணனி வள நிலையத்திலும், 14ஆம் திகதி திங்கட்கிழமை 11ஆம் தரத்தில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட செயற்திட்டச் செயலமர்வு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலும், 15ஆம் திகதி செவ்வாய்கிழமை 7ஆம் தரத்தில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட செயற்திட்ட செயலமர்வு வட இந்து மகளிர் கல்லூரியிலும், 16ஆம் திகதி 10ஆம் தரத்தில் சைவ நெறி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சைவ நெறி கற்பித்தலில் உத்திகளைக் கடைப் பிடித்தல் செயலமர்வு, நெல்லியடி ஆசிரிய நிலையத்திலும், 17ஆம் திகதி வியாழக்கிழமை 8, 9ஆம் தரங்களில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கற்பித்தல் உபகரணத் தயாரிப்பும் கணிப்பீட்டுக்கருவி விளக்கமும் செயலமர்வு வட-இந்து மகளிர் கல்லூரியிலும், அன்றைய தினம் 11ஆம் தரத்தில் முயற்சியாண்மை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை, வினைத்தின் மிக்க தாக்குதல் செயலமர்வு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை 11ஆம் தரத்தில் சைவநெறி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சைவநெறிகள் கற்பித்தல் உத்திகளைக் கடைப்பிடித்தல் செயலமர்வு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், அதே தினம் ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனை விழிப்புணர்வுச் செயலமர்வு நெல்லியடி ஆசிரிய நிலையத்திலும் நடாத்தப்படவுள்ளன. (ஓ-52)

## கல்விக்கோட்டங்கள் தோறும் உளவளத்துணை நிலையம்

(அல்வாய்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல கல்விக் கோட்டங்களிலும் ஒரு பாடசாலையில் உளவளத்துணை நிலையம் அமைக்கப்படவுள்ளது. இதன் பிரகாரம் பருத்தித்துறை கல்விக் கோட்டத்திற்கான உளவளத் துணை நிலையம் வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் இன்று காலை 10 மணிக்கு வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) செ.உதயகுமாரினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்நிலையம் சனி, ஞாயிறு தினங்களிலும் பாடசாலை நாட்களில் பி.ப.2 மணியிலிருந் 4.30 மணிவரையும் நடைபெறும். இதற்காக ஏற்கனவே பயிற்சிபெற்ற உளவளத் துணையாளர் இருவரும், உளவள நட்புறவாளர் ஒருவரும் கடமையாற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஓ-19)

## தேசிய இலக்கியப் போட்டி நல்லூர் பிரதேச முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் பிரதேச மட்டத்தில் நடாத்தப்பட்ட தேசிய இலக்கியப் போட்டிகளில் நல்லூர் பிரதேசத்திற்கான முடிவுகள் வருமாறு:-

**சிறுகதை ஆக்கம்**

1ஆம் இடம்:- ர.மதுரன் -கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம், 2ஆம் இடம்:- சி.கௌதமன் யாழ்.இந்துக்கல்லூரி, செ.சரண்யா- கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்.

**திறந்த போட்டி**

1ஆம் இடம்:- அரியாலையூர் சி.சிவ தாசன், 2ஆம் இடம்:- ந.தர்ஷினி, 3ஆம் இடம்:- ச.சுரேஸ்குமார்.

**II கவிதை கனிஷ்ட பிரிவு**

1ஆம் இடம்:- ஜெ.ஸ்ரீக்குமரன்- நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை, 2ஆம் இடம்:- அ.சங்கீதா - நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை, 3ஆம் இடம்:- பி.கு.றோபல் றட்ணசிறி- யாழ்.இந்துக்கல்லூரி.

**சிரேஷ்ட பிரிவு**

1ஆம் இடம்:- ம.துவாரகன்- யாழ்.இந்துக் கல்லூரி, 2ஆம் இடம்:- த.வஜீதா -யாழ். இந்து மகளிர் கல்லூரி, 3ஆம் இடம்:- சி.கஜேந்தினி - யாழ்.இந்து மகளிர் கல்லூரி, நி.சயனா - யாழ். இந்து மகளிர் கல்லூரி.

**திறந்த போட்டி**

1ஆம் இடம்:- அரியாலையூர் சி.சிவ தாசன், 2ஆம் இடம்:- செ.பஞ்சநாதன், 3ஆம் இடம்:- இ.ஸ்ரீகஜலக்ஷ்மி.

**III கட்டுரை ஆக்கம் கனிஷ்ட பிரிவு**

1ஆம் இடம்:- ர.வித்தியசங்கர் - யாழ்.இந்துக்கல்லூரி, 2ஆம் இடம்:- ஆ.மெசிஞானரூபி யாழ்.இந்து மகளிர் கல்லூரி, 3ஆம் இடம்:- மோ.தனுசா - கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்.

**சிரேஷ்ட பிரிவு**

1ஆம் இடம்:- க.உஷாந்தன் - யாழ். இந்துக்கல்லூரி, 2ஆம் இடம்:- ச.பிரசங்கா - செங்குந்தா இந்துக்கல்லூரி, நா.நாகநந்தினி -




செங்குந்தா இந்துக்கல்லூரி.

**IV பாடலாக்கம்- திறந்த போட்டி**

1ஆம் இடம்:- அரியாலையூர் சி.சிவ தாசன், செ.பஞ்சநாதன், 3ஆம் இடம்:- இ.ஸ்ரீ கஜலக்ஷ்மி. (ஓ)

## மஹோற்சவம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மஹோற்சவம் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

19ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் மாலை 4 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (ஓ-7)

* * *

வட்டுக்கோட்டை அராலி மத்தி அருள்மிகு உலோலை சிட்டி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவப் பெருவிழா 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

விழாவில் 19ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.11 மணிக்கு தேர்திருவிழாவும், 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும். (ஓ-7)

* * *

(மூளாய்)


மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான மஹோற்சவம் இன்று புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.


விழாவில் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவமும், மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (ஓ-7)

## சிற்றூர்திச் சேவை

(யாழ்ப்பாணம்)

புத்தாண்டை முன்னிட்டு அனைவரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்.மாவட்ட சிற்றூர்திகளின் சேவைகள் யாவும் யாழ்.பஸ் நிலையத்திலிருந்து நாளை வியாழக்கிழமை தொடக்கம் மாலை 6 மணிவரை இடம்பெறும் என்பதை யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலக தலைவர் பொ.கெங்காதரன் அறிவித்துள்ளார். (அ-7)





நல்லூர் முருகன்சனசமூக நிலையம், பெரியார் கந்தையா குமாரசுவாமியின் 50 வருட சமூகப்பணியினைப் பாராட்டி அவரின் அமுதவிழா அன்று "அபயகரம்" எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நல்லை ஆதீன கலா மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விழாநாயகன், செயலாளர் யே.நிரோஷ் ஆனந்த், பொருளாளர் க.லோகானந்தம் ஆகியோரால் மாலை அணிவித்து கௌரவிக்கப்படுவதையும், ஓய்வுபெற்ற ஆசிரியை செல்வி புஷ்பா செல்வநாயகம், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், விழாநாயகனுடன் மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலக திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன், விழாத்தலைவர் நா.சோமசுந்தரம், யாழ். மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, நல்லூர் தெற்கு கிராமசேவையாளர் இராகினி இராமலிங்கம் ஆகியோர் நிற்பதை இரண்டாவது படத்திலும் விழா நாயகனுடன் நிலைய நிர்வாகக் குழு உறுப்பினர்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# பாகிஸ்தான் இடைத்தேர்தலில் நவாஸ் ஷெரீப் போட்டி

(லாகூர்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் இடைத்தோத்லில் லாகூரில் போட்டியிடுகிறார்.



போட்டியிட தடை

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும், முஸ்லிம் லீக் கட்சி தலைவருமான நவாஸ் ஷெரீப் வெளிநாடுகளில் 7 ஆண்டுகள் தங்கி இருந்து விட்டு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தாய் நாடு திரும்பினார் . அவர் கடந்த பெப்ரவரி மாதம் நடந்த பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட விரும்பினார். ஆனால் அவர் மீது ஊழல் வழக்கு இருப்பதாக கூறி அவர் போட்டி யிடு வதற்கு தடை விதிக்கப் பட் டது. இதனால் அவர் போட்டியிட இயலாமல் போய்விட்டது.

இந்த நிலையில் மக்கள் கட்சியும், அவரது கட்சியும் கூடுதல் இடங்களில் வெற்றி பெற்றதை தொடர்ந்து இந்த கட்சிகள் அடங்கிய கூட் டணி ஆட்சி ஏற்பட்டு மக்கள் கட்சி பிரமுகர் கிலானி பிரதமர் ஆனார்.

பாராளுமன்ற தேர்தலில் முஸ்லிம் லீக் கட்சி பிரமுகர்களில் ஒரு சிலர் ஒன்றுக்கும் மேற்பட்ட தொகுதிகளில் போட்டியிட்டனர். இப்படி போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் ஒருதொகுதிக்கு மேற்பட்ட தொகுதிகளை ராஜினாமா செய்ய இருக்கிறார்கள். அப்படி ராஜினாமா செய்ய இருப்பவர்களில் ஒருவர் ஜாவேத் ஹஷ்மி. இவர் லாகூர் உள்பட 3 தொகுதிகளில் போட்டி யிட்டு வெற்றி பெற்றார்.

அவர் லாகூர் தொகுதியை ராஜினாமா செய்கிறார். காலியாகும் அந்த தொகுதியில், அடுத்த மாத மத்தியில் இடைத்தேர்தல் நடக்க இருக்கிறது. இதில் நவாஸ் ஷெரீப் போட்டியிடுகிறார். அவர் இந்த தொகுதி தவிர இன்னொரு தொகுதியிலும் போட்டியிட இருக்கிறார்.

அவர் கடந்த 1997ஆம் ஆண்டு கவால் மண்டி தொகுதியில் தான் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அந்த தொகுதியில் 5 முறை வெற்றி

## பின்னடைவின் எதிரொலி பிரசார அதிகாரி நீக்கம்

(நியூயோர்க்)

அமெரிக்கா ஜனாதிபதி தேர்தல் ஜனநாயக கட்சி வேட்பாளரை தேர்வு செய்வதற்கான தேர்தல் நடந்து வருகிறது. இதில் ஹிலாரி, ஒபாமா இடையே கடும் போட்டி நிலவுகிறது.

ஆரம்பத்தில் முன்னணியில் இருந்த ஹிலா ரியை ஒபாமா பின்னுக்கு தள்ளிவிட்டு

**உலக தரிசனம்**

முன் னேறி வருகிறார்.

இதனால் ஏற்கனவே ஹிலாரி தனது தேர் தல் பிரசார மனேஜரை மாற்றினார். இப்போது தேர்தல் பிரசார தலைமை அதிகாரி மார்க் பெல் லாவை நீக்கி உள்ளார். அவருடைய பொறுப் புக்களை ஹாபார்டு, வால்ப்சன், ஜெராஜ்காரின் ஆகியோருக்கு பகிர்ந்து கொடுத்துள்ளார்.

ஹிலாரி கொள்கைகள் சிலவற்றுக்கு மார்க்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தார். எனவே

# பெனாசீரின் வரவேற்பு ஊர்வலத் தாக்குதலை விசாரிக்க புதிய ஆணைக்குழு நியமிக்கப்படும்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவெளிநாட்டில்இருந்துவந்தபோது கராச்சியில்வரவேற்பு ஊர்வலத்தில் நடந்த தற்கொலைப்படைத்தாக்குதல் குறித்து விசாரிக்க புதியஆணைக்குழுஅமைக்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டு அக்டோபர் 18 ஆம் திகதி நடந்த இத் தாக்குதலில்140 பேர் இறந்தனர். பெனாசீர் உயிர் தப்பினார் . டிசம்பரில் ராவல் பிண்டியில் தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் பெனாசீர் சுட்டுக்கொல்லப்பட்டார். கராச்சியில் வரவேற்பு ஊர்வலத்தில்நடந்த தற்கொலைப் படைத் தாக்குதலில் சிந்து மாகாண முன்னாள் முதல்வர்அர்பாப் குலாம் ரஹீமுக்கு தொடர்பிருக்கலாம் என்றசந்தேகம் இருப்பதாக ஆளும் கட்சியானபாகிஸ்தான் மக்கள் கட்சி கூறியுள்ளது.

சிந்து மாகாணத்தில் பாகிஸ்தான் மக்கள் கட்சி பெரும்பான்மை பலம்பெற்றுள்ளது. அங்கு ஆட்சி அமைக்கப்பட்ட பிறகு பழைய ஆணைக்குழு க்லைக்கப்பட்டுபுதிய ஆணைக் குழு அமைக்கப்படும் என்று அக்கட்சியின் சிந்துமாகாணத்தலைவர் ஜுல்ஃபிகர் அலிம் மிர்ஸா கூறினார். பாகிஸ்தான்அதிபர் முஷாரப்பின் ஆதரவுக்கட்சியான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் – கியூகட்சியின் தலைவர் தான் அர் பாப் குலாம் ரஹீம் .பெனாசிரின் பய ணம் நள்ளிரவிலேயே முடிந்து விடும் என்று காராச்சியில் நடந்ததற்கொலைப் படைத் தாக்குதலுக்கு முன்தினம் ரஹீம்கூறினார். இதனால் அவர்மீது சந்தேகம் எழுந்துள்ளது. என்னை ஒழித்துக்கட்டரஹீமும்அவரது கட்சியைச் சேர்ந்த தலைவர்களும்மற்றும் அரசு அதிகாரிகளும் திட்ட மிட்டுள்ளனர் என்று பெனாசீர் பூட் டோவும் பேசியுள் ளார் .ரஹீம் தான் குற்றவாளி என்று புதிதாக அமைக்கப்படும் ஆணைக் குழு முடிவு செய்தால் அவர் தூக்கில் இடப்படுவார் என்று கராச்சியில் நிருபர்களிடம் கூறி னார் மிர் ஸா .



ஓய்வு பெற்ற நீதிபதிகௌஸ் முகமது தலை மையில் முந் தைய அரசு நியமித்த ஆணைக் குழுவில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. எனவே தான் புதிய ஆணைக்குழுவை அமைக்க இருக்கிறோம் என்றார் அவர்.

# தேர்தல் முடிவை மதித்து நடக்காவிட்டால் மன்னருக்கு கடும் தண்டனை விதிக்கப்படும்

(காத்மாண்டு)

நேபாள நாட்டில் கடந்த 240 ஆண்டுகளாக நடந்து வரும் மன்னர் ஆட்சிக்கு முடிபு கட்டும் வகையில் புதிய அரசியல் சட்டம் உருவாக்கப்பட இருக்கிறது. இதற்காக புதிய அரசியல் சட்ட நிர்ணயசபையை தேர்ந்து எடுப்பதற்கான தேர்தல் இன்று நடக்க இருக்கிறது. இந்த தேர்தல் முடிவை மன்னர் மதித்து நடக்க வேண்டும் மக்கள் தீர்ப்பை தடுக்க முயன்றால் அவர் மீது வழக்கு தொடரப்படும். அவருக்கு கடும் தண்டனை விதிக்கப்படும் என்று மாவோயிஸ்டு தலைவர் பிரசந்தா எச்சரித்தார்.

இது தொடர்பாக அவர் நிருபர்களிடம் மேலும் கூறுகையில்,

அவர் தேர்தல் முடிவை ஏற்றுக்கொண்டு மன்னராட்சியை முடிவுக்கு கொண்டுவர சம்மதித்தால் மக்கள் அவரை மன்னிப்பார்கள். அவர் நேபாளத்தில் தங்கி இருப்பத்தில் எந்த பிரச்சினையும் இருக்காது என்று தெரிவித்தார்.

(அ-5)

# ஹொலிவுட் ‘லவ்குரு’ படத்துக்கு இந்து அமைப்புகள் எதிர்ப்பு

(வோஷிங்டன்)

இந்து மதத்தை கிண்டல் அடிக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட ஹொலிவுட் படம் லவ் குருவுக்கு அமெரிக்காவில் உள்ள இந்து அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

‘லவ்குரு’ படத்தை பாரமவுண்ட் நிறுவனம் தயாரித்துள்ளது. கனடாவை சேர்ந்தஹொலிவுட் காமெடி நடிகர் மைக் மியர்ஸ் முக்கிய வேடத்தில்நடித்துள்ளார். இந்தியாவுக்கு சென்று வேதம் கற்று யோக கலைகளை அறிந்து அமெரிக்கா திரும்பியவர் குரு மவுரிஸ் பிட்கா; 35 வயதான இவரை கிண்டல் அடித்துத்தான் இந்தபடம் எடுக்கப்பட்டுள்ளது. குரு பிட்கா வேடத்தில் மைக் மியர்ஸ் நடித்துள்ளார்.

இந்த படத்துக்கு அமெரிக்காவில் உள்ள இந்து அமைப்புகளும், இந்து சாமியார்களும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்து மதத்தையும் வேதங்களையும் மட்டுமின்றி இந்தியாவில் பல நூற்றாண்டுக்கு முன் உருவாக்கப்பட்ட உலகம் முழுவதும் போற்றப் படும் யோகக் கலையை கிண்டல் அடிப்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று கூறியுள்ளனர்.

பாரமவுண்ட் நிறுவனம் இதை மறுத்துள்ளது. ‘படத்தில் இந்து மதத்தையோ, ஆன்மீகத் தலைவர்களையோ கிண்டல் அடிக்கவே இல்லை. தீபக்சோப்ரா போன்ற இந்துமதத் தலைவர்களுக்கு விசேட காட்சியாகப் போட்டுக் காட்ட தயார்’ என்று கூறியுள்ளது. இந்தப்படம் தொடர்பாக வெப்சைட்களில் பரபரப்பான செய்திகள் வெளியாகி வருகின்றன. யூன் மாதம் படம் திரையிடப்படுகிறது.

(அ-5)

# நாட்டைக் காப்பாற்றவே குற்றத்தை ஒப்புக்கொண்டேன் -பாக் விஞ்ஞானி

(இஸ்லாமபாத்)

‘நாட்டைக் காப்பாற்றுவதற்காகவே அணு ஆயுத இரகசியங்களை விற்ற குற்றம் முழுவதையும் நானே செய்ததாக ஒப்பக்கொண்டேன்’ என பாகிஸ்தான் அணு விஞ்ஞானி அப்துல் காதிர் கான் கூறியுள்ளார்.



பாகிஸ்தானின் அணு அணுயுத இரகசியங்களை ஈரான், வட கொரியா, லிபியா உள்ளிட்ட நாடுகளுக்கு விற்றதாக காதிர் கான் மீது 2004ஆம் ஆண்டு குற்றம் சாட்டப்பட்டது.

இந்தக் குற்றத்தை கான் ஒப்புக்கொண்டதால் ஜனாதிபதி முஷாரப் அவருக்கு மன்னிப்பு வழங்கினார். ஆனாலும் அவர் தொடர்ந்தும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

அணு ஆயுத இரகசியங்களை வெளிநாடுகளுக்கு கடத்தியதில் அரசுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என முஷாரப் தொடர்ந்தும் மறுத்து வருகிறார். இருப்பினும் காதிர் கானை சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் விசாரிப்பதற்கு முஷாரப் அனுமதியளிக்கவில்லை.

இந்நிலையில் தொலைபேசி மூலம் ஞாயிற்றுக்கிழமை அவர் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார். ‘அணு ஆயுத நாடாக மாற்றியதன் மூலம் பாகிஸ்தானை முதல் முறையாகக் காப்பாற்றினேன். அணு ஆயுத இரகசியங்களை வெளிநாடுகளுக்கு விற்ற குற் றத்தை நானே செய்ததாக ஒப்புக்கொண்ட போது இரண்டாவது முறையாக நாட்டைக் காப்பாற்றினேன்’ என தொலை பேசி மூலம் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது அப்துல் காதிர் கான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காதிர் கானை வீட்டுக்காவலில் இருந்து விடுவிப்பது குறித்து பாகிஸ்தானின் புதிய அரசு ஆலோசித்து வருகிறது. (அ-5)

## அமெரிக்க அதிகாரிகள் குடியிருப்பில் தாக்குதல் ; 5 வீரர்கள் பலி

(ஈராக்)

ஈராக் பக்தாத் நகரில் கிரீன் சோன் என்ற புதிய குடியிருப்பு பகுதி உருவாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க தூதரகம் அமெரிக்க அதிகாரிகள் குடியிருப்பு பகுதி இராணுவ முகாம் ஆகியவை இங்குள்ளன.

இங்கு தீவிரவாதிகள் ரொக் கெட்டுகளை வீசி தாக்கியுள்ளார்கள். இதில் 5 அமெரிக்க இராணுவ வீரர்கள் உயிர் இழந்தனர்.

மேலும் பல இடங்களில் நடந்த தாக்குதலில் 22 பேர் பலியானார்கள் 50 பேர் காயம் அடைந்தனர். (அ5)

# பிரித்தானிய இளவரசர் ஹரி விரைவில் காதலியின் கரம்பிடிக்கத் திட்டம்

(லண்டன்)

பிரித்தானியாவின் முடிக்குரிய இளவரசர்கள் வரிசையில் மூன்றாமிடத்திலுள்ள ஹரி, சிம்பாப்வேயினைப் பிறப்பிடமாகக் கொண்ட தனது காதலி செல்ஸி டேவியை விரைவில் திருமணம் செய்யவுள்ளதாக பிரித்தானிய தினசரியொன்று செய்தி வெளியிட்டுள்ளது.



கேப் டவுனிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் வைத்து செல்ஸி டேவியின் தந்தை யும் கோடீஸ்வரருமான சாள்ஸ் டேவியையும் தாயாரான பெவெர்லியையும் சந்தித்து தமது திருமணம் தொடர்பில் ஹரி கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் இளவரசர் ஹரியின் நண்பர்கள் மேற்படி தினசரிக்கு அளித்த பேட்டியில் ஹரி பாரம்பரிய கலாசாரத்தைப் பின்பற்றும் ஒருவர் அதனால் அனைத்தும் முறைப்படி நடக்கவேண் டும் என்பதை அவர் விரும்புகிறார். அதன் காரணமாகவே தனது திருமணம் தொடர்பில் செல்ஸி டேவியின் தந்தையின் அனுமதியை கேட்டுள்ளார் என்று தெரிவித்தனர்.

அதேசமயம் செல்ஸி டேவியின் குடும்ப நண்பர் ஒருவர் இவ்விவகாரம் குறித்து விபரிக்கையில் ‘ஹரி தமது மகளை நேசிக்கிறார் என்பதை செல்ஸியின் பெற்றோர்கள் அறிவார்கள் ஆனால் அந்தக் காதல் எந்தளவுக்கு வலிமையானது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள அவர்கள் விரும்புகின்றார்கள்’ என்று கூறினார். (அ-5)

# நான் கூறிய அனைத்தையும் பதிவு செய்திருப்பார்கள் என்று எண்ணியே அதன் கீழ் கையெழுத்திட்டேன்

## அக்ஷன் பெய்ம் ஊழியரின் உறவினர் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம்

(கொழும்பு)

இரகசிய பொலிஸாரால் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குமூலத்தில் நான் கூறிய அனைத்தையும் பதிவு செய்திருப்பார்கள் என எண்ணியே அதில் கையெழுத்திட்டேன். ஆனால் அந்த வாக்குமூலம் எனக்கு வாசித்து காட்டப்பட வில்லை என மூதூரில் கொல்லப்பட்ட அக்ஷன் பெய்ம் ஊழியரான ஜயசீலனின் உறவினர் ஒருவர் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சிய மளிக்கும் போது தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் பொய் எதனையும் கூறவில்லை என்று கூறிய அவர் தான் கூறுவது அனைத்தும் உண்மைத்தகவல்களே என்றும் கூறினார்.

அக்ஷன் கொன்ராலா பெய்ம் எனும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனத்தின் ஊழியர்கள் 17 பேர் கடந்த 2006 ஆகஸ்ட் மாதம் மூதூரில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பான விசாரணைகளை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு கடந்த மார்ச் மாதம் முதல் வாரத்திலிருந்து மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு கட்ட விசாரணைகள் நேற்று முன்தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ரெஸ்ரோறன்ட் ஹோலில் இடம்பெற்றது. இதன்போது சாட்சியை குறுக்கு விசாரணை செய்த சட்டத்தரணி கோமின் தயாசிறி,

கொல்லப்பட்டவரான ஜயசீலன் தொடர்பாக சாட்சியம் அளித்த சாட்சி ஆணைக்குழு முன்னிலையில் 2006 ஆகஸ்ட் 04 ஆம் திகதி காலை 6 மணிக்கும் 6.30மணிக்கும் இடையில் ஜயசீலனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியதாக தெரிவித்தார்.

ஆனால் 2006 ஆகஸ்ட் 14 ஆம் திகதி இரகசிய பொலிஸாரிடம் வழங்கிய வாக்கு மூலத்தில் 04ஆம் திகதிய சம்பாஷணைகள் குறித்து எதுவும் கூறியிருக்க வில்லை. அவ்வாறான விடயம் அவ் வாக்குமூலத்தில் பதிவு செய்யப்படவும் இல்லை எனவே சாட்சி ஆணைக்குழு முன்னிலையில் பொய் சாட்சியத்தையே அளித்துக்கொண்டிருக்கிறார். அதுமட்டு மல்லாமல் அவரது சாட்சியம் முன்னுக்குப் பின் முரணானதாக அமைந்துள்ளது என்று சுட்டிக் காட்டினார்.

இதனைத் தொடர்ந்து மாவிலாறு அணைக்கட்டு தமிழீழ விடுதலைப்புலிகளினால் மூடப்பட்டது. மற்றும் அந்த அணைக்கட்டு இராணுவத்தினரால் மீண்டும் திறக்கப்பட்டது. 2002. 2005 ஆம் ஆண்டுகளில் இடம் பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வுகள் குறித்தும் கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்த சட்டத்தரணி கோமின் தயாசிறியை இடைமறித்த ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் நிசங்க உடலாகம கேள்விகள் தொடர்பில்லாமல் இருப்பதாகவும் அதே நேரம் ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் கேட்டு நேரத்தை விரயமாக்கவேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதன் பின்னர் அக்ஷன் பெய்ம் நிறுவனத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ரட்ணவேலன் மற்றும் அரசு தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி துலிப் ஜயக்கொடி ஆகியோர் தொடர்ந்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்த போது அவர் மேலும் கூறியதாவது,

2006ஆகஸ்ட், முதலாம் திகதி மதிய வேளைக்குப் பின்னர் மூதூரில் யுத்த நிலைமை அதிகரித்திருந்தது உண்மைதான். அதனாலேயே ஜயசீலனுடன் தொடர்ந்து தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டிருந்தேன்.

அதேபோல் எனது உறவினர்களும் அவருடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனாலும் அவர்களிடம் ஜயசீலன் என்ன பேசியிருப்பார் என்பது எனக்குத் தெரியாது.

அத்தோடு, ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி 6.00. - 6.30க்கிடையில் ஜயசீலனுடன் தொலை பேசியூடாக நான் பேசினேன் என்பது உண்மையாகும். இதன் பின்னர் 5ஆம் திகதி அக்ஷன் பெய்ம் ஊழியர்கள் சிலர் மூதூரில் கொல்லப்பட்டு விட்டதாக தொலைபேசி அழைப்பொன்றின் மூலம் தெரிந்து கொண்டேன். என்னிடம் வாக்கு மூலம் பெறப்பட்டபோது இந்த விடயங்களை கூறியிருக்கிறேன்.

நான் கூறிய அனைத்து விடயங்களும் அவ்வாக்கு மூலத்தில் பதியப்பட்டிருக்கும் என்றே நம்பினேன். அதனடிப்படையிலேயே வாக்கு மூலத்தை பெற்றுக்கொண்டவர்கள் காட்டிய இடத்தில் கையொப்பமிட்டேன். அந்த சமயத்தில் அவ்வாக்கு மூலம் எனக்கு வாசித்துக் காட்டப்படவில்லை. ஆனால் 2008 பெப்ரவரி மாதம் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் நான் வழங்கிய வாக்கு மூலம் மீண்டும் எனக்கு வாசித்து காட்டப்பட்டது.

ஆணைக்குழு முன்னிலையில் நான் பொய் எதனையும் கூறவில்லை நான் கூறுவது அனைத்தும் உண்மையே அத்துடன் அக்ஷன் பெய்ம் ஊழியரான ஜயசீலன் சுட்டுக்கொல்லப்பட்டு விட்டார் என்பது குறித்து கூறியிருந்தேனே தவிர இராணுவத்தினர் தான் சுட்டுக்கொன்றனர் என்று எந்த சாட்சியத்திலும் நான் கூறியிருக்கவில்லை. அக்ஷன் பெய்ம் ஊழியர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி காலை 10.30 மணியளவில் தெரிந்து கொண்ட நாம் அன்று ஜயசீலனும் கொல்லப்பட்டு விட்டாரா என்ற விடயத்தை அறிய முடியாமல் இருந்தோம்.

ஆனால் அதற்கடுத்த நாள் 6ஆம் திகதி ஊடகங்களின் வாயிலாக அக்ஷன் பெய்ம் ஊழி யர்கள் அனைவரும் சுட்டுக்கொல்லப்பட்டு விட்டனர் என்பது உறுதி செய்யப்பட்டிருந்தது. (அ-5)

## அமைச்சர் ஜெயராஜின் இடத்தை நிரப்ப தகுதியானவர்கள் அரசாங்கத்தில் இல்லை

### ஜே.வி.பி.எம்.பி. லால்காந்த தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் இடத்தை நிரப்புவதற்கு தகுதியான எவரும் இன்று அரசாங்கத்திற்குள் இல்லை.

இந்த அரசாங்கத்தை ஜே.வி.பியே உருவாக்கியது என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மறந்துவிட்டாலும் அந்நினைப்பும் ஜே.வி.பிக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டும் என்ற எண்ணமும் மறைந்த அமைச்சரிடம் குடிகொண்டிருந்தது என ஜே.வி.பி. எம்.பி.கே.ரீ. லால்காந்த தெரிவித்தார்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மறைவு தொடர்பாக கருத்துத்தெரிவிக்கையிலேயே கே.ரீ. லால்காந் எம்.பி இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பிரதம கொறடா என்ற பதவியை பொறுப்புடன் வகித்தவர். பாராளுமன்றத்திற்குள் எம்.பிமாரின் கேள்விகளுக்கு அரசாங்கத்தை பாதுகாத்துக்கொண்டு பதிலளித்தார். கடுமையான வாக்குவாதங்களில் ஈடுபட்டார். அவரது பதில்கள் [illegible] அனைத்தையும் ஏற்கமுடியாவிட்டாலும் தனது வாதத்திறமையால் அரசாங்கத்தை பாதுகாத்தார்.

ஆனால். இன்று அப்பதவியை வகிக்க தகுதியானவர் எவரும் அரசாங்கத்திற்குள் இல்லை. இந்த அரசாங்கத்தை ஜே.வி.பியே உருவாக்கியது. என்பதை ஜனாதிபதியே மறந்து செயற்படுகையில் ஜே.வி.பி. மீது பற்றுடனும் நன்றிக்கடன் செய்யவேண்டும் என்ற எண்ணத்தோடு இருந்தவர். பயங்கரவாதத்திற்கு எதிராக துணிந்து கருத்துக்களை வெளியிட்டார். ஆனால். அரசாங்கம் விடுதலைப் புலிகளை தோல்வியடைச் செய்வதில் இரட்டை வேடம் போடுகிறது. அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

படையினருக்கு மக்கள் வழங்கும் ஆதரவை அரசாங்கத்திற்கு வழங்கும் ஆதரவாக காட்ட முனைகிறது எனவே. தவறுகளை திரும்பிப் பார்க்கவேண்டும். அவை திருத்திக்கொள்ளப்படவேண்டும். (அ-5)

## விமல் வீரவன்ச விலக்கப்படவில்லை

### விஜித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல்வீரவன்ச கட்சியில் வகித்த பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக வெளிவந்த செய்தியில் உண்மையில்லை.

ஜே.வி.பிக்குள் பிரச்சினைகள் தோன்றும் போது அதனைஎமக்கிடையிலான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்வோமென விஜித ஹேரத்எம்.பி. தெரிவித்தார்.

ஜே.வி.பிஎம்.பி. விமல்வீரவன்சகட்சிப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்திகள்தொடர்பாக கேட்டபோதேவிஜிதஹேரத் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

எமது கட்சிக்குள் உருவாகும் பிரச்சினைகள், கருத்து வேறுபாடுகளைஎமக்கிடையேயான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்வோம். அதுவே எமது கட்சியின் கொள்கையாகும்.

கட்சியின் பதவிகளிலிருந்து வீரவன்ச எம்.பி நீக்கப்பட்டுள்ளாரென்ற செய்தியில் உண்மையில்லை. அவ்வாறானதொரு தீர்மானத்தைகட்சி எடுத்திருக்குமேயானால் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தி அதனை வெளியிட்டிருப்போமெனத் தெரிவித்தார்.

அப்படியானால் கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை இடம் பெற்ற ஏப்ரல் வீரர்கள் அஞ் சல்சலி நிகழ்வில் விமல் வீரவன்ச எம். பி. ஏன் கலந்து கொள்ளவில்லையென கேட்ட போது,

கட்சி நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு அழைப்பிதழ் வழங்கும் பழக்கம் எமக்குக் கிடையாது. அரசியல் சபையின் தீர்மானங்களுக்கமையவே அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

எனவே ஏப்ரல் வீரர்கள் அஞ்சலி நிகழ்வில் வீரவன்ச எம். பி. கலந்து கொள்ளாததையிட்டு தனக்கு ஒன்றும் தெரியாது என்றும் விஜித் ஹேரத் எம்.பி. தெரிவித்தார். (அ-5)

## சமாதான முறையில் ஈழத்தை பெற டக்ளஸும்,ஆனந்தசங்கரியும் முயற்சி

### ஜே.வி.பி.எம்.பி.பியசிறி விஜேநாயக்க கூறுகிறார்

(குருணாகல்)

தமிழீழம் உருவாக இருந்த சந்தர்ப்பங்களில் மக்கள் விடுதலை முன்னணியே அதனைத் தடுத்தது. பிரேமதாஸ. சந்திரிக்கா ஆகியோர் நாட்டை பிரித்துக்கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டமையாலேயே தங்கள் முழுப் பதவிக் காலத்தையும் வகிக்கமுடியாத நிலை ஏற்பட்டது. இன்று 13ஆம் திருத்த சட்டத்தை அமுல்படுத்த முடியும் என நினைத்துச் செயற்படும் ஜனாதிபதி மஹிந்தர ராஜபக்ஷ வுக்கும் இந்த நிலையே ஏற்படும் என்று ஜே. வி.பியின் களுத்துறை மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் பியசிறிவிஜேநாயக்க தெரிவித்தார்.

குருணாகலையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது,

கிராமியத்தலைவர்களுடன் ம.வி.மு. இணைந்து செயற்படத்தீர்மானித்துள்ளது. ஏனைய கட்சிகள் நாட்டுப்பிரச்சினையை அறிய முன் நாம் அவற்றை தெளிவாக மக்களுக்கு விளக்கி வருகின்றோம். சந்திரிக்காவுடன் அரசமைத்து அதிலிருந்து நாம் விலகினோம்.மஹிந்த ராஜபக்ஷவை நாம் ஜனாதிபதியாக்கினோம்.

எமது கட்சியைச சாராத மஹிந்த ராஜபக்ஷ தீர்வொன்றை பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கையில் அவருக்கு உதவினோம்.

ஆனால் யுத்தத்தில் நாம் வெற்றி பெற்றுக்கொண்டிருக்கும் இக்காலத்தில் பெற்ற வெற்றியை மஹிந்த ராஜபக்ஷ 13ஆம் திருத்தச்சட்டத்தை கொண்டுவந்து வெள்ளித்தட்டில் வைத்து மீண்டும் அதைப் புலிகளுக்கு வழங்க முயற்சி செய்கின்றார் நாட்டைகாட்டிக் கொடுக்கும் செயற் பாட்டிலேயே அவர் ஈடுபட்டுள்ளார்.

டக்ளஸ்தேவானந்த, ஆனந்தசங்கரி போன்றோர் சமாதானமானமுறையில் ஈழத் தைப்பெற முயற்சி செய்கின்றனர். நாட்டின் தலைமையை ம.வி.மு. ஏற்கும் காலம் உருவாகியுள்ளது. 13ஆம் திருத்தச்சட்டமூலம் ஈழம் உருவாகும் என்பதை மஹிந்த நன்றாகத் தெரிந்துவைத்துள்ளார். அவரின் நோக்கத்தை நாம் தோற்கடிக்கவேண்டும். மஹிந்த 12 வருட ஆட்சி செய்தபின் தன் மகனை ஜனாதிபதியாக்க முயற்சி செய்து வருகின்றார்.

இன்று சர்வகட்சி குழுவில் அரசாங்கம் மட்டுமே உள்ளது. இன்று மஹிந்தஅரசு மக்கள் தீர்ப்பை காலால் எட்டி உதைக்கின்றது.

13ஆம் திருத்தச் சட்டமூலம் நாட்டைப் பிரிக்க முயல்வதை நாம் தடுக்கவேண்டும். இதை நாம் தோற்கடிக்கவேண்டும். இதற்கான தலை மைத்துவத்தை ம.வி.மு. ஏற்கும். வெளிநாடுகள் உதவி செய்து சமாதான என்ற போர்வையில் புலிகளையே வளர்த்துள் ளன. நோர்வே சென்ற இடமெல்லாம் நாடு பிரிவடைந்தது. ஐரோப்பிய ஒன்றியம் ஒன் றாக இயங்கிக்கொண்டு ஏனைய நாடுகளை பிரித்துவருகின்றது.

ஏகாதிபத்தியவாதிகளும் இந்தியாவும் நாட்டை பிரிக்கப்பார்க்கின்றனர். இந்தியாவிலிருந்து வந்த நல்லவற்றை நாம் ஏற்றுள்ளோம். ஆனால். அவர்கள் கூறும் அனைத்தையும் நாம் ஏற்கத்தேவையில்லை. இந்தியா போடும் தாளத்திற்கு நாம் ஆடத்தேவையில்லை. இலங்கையில் தலைவர்கள் இந்தியாவின் கைப்பாவைகள் மஹிந்த ராஜபக்ஷ காட்போட் தேசியவாதி. குரக்கன் நிறைசால்வையை அணிந்து கொண்டு நாட்டை குட்டிச்சுவராக்கி வருகின்றார்.

நாட்டின் தலைவர்கள் தூதுவர்களின் இல்லங்களுக்குச் செல்வதில்லை. மஹிந்த ராஜபக்ஷ இந்தியத்தூதுவர் இல்லத்திற்குச் சென்று நாட்டின் மதிப்பையும் தலைமைத்துவத்தையும் இழிவுபடுத்தியுள்ளார்.

நாட்டிற்காக உயிரைத் தியாகம் செய்ய வேண்டிய ஒரு தலைவரே நாட்டிற்கு தேவை. அதைச் செய்யக்கூடிய கட்சி மக்கள் விடுதலை முன்னணியே ஆகும். எனக்குறிப்பிட்டார். (அ-5)

# பல்துறை வித்தகர் பண்டிதர் சச்சிதானந்தன்

1921ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதிமாவிட்டபுரத்தில் பிறந்த பண்டிதர் குடும்ப உறவு காரணமாக சிறுவயது முதல் தும்பளையில் சில காலமும், மாவிட்டபுரத்தில் சில காலமும் மாறிமாறி வாழ்ந்தவர்.

அதனால் தனது ஆரம்பக்கல்வியை பருத்தித்துறை தட்டாதெரு அ.த.க பாடசாலையிலும் காங்கேசன் துறைநடேஸ்வராக் கல்லூரியிலும் பெற்றார். இடைநிலைக் கல்வியை நடேஸ்வராக்கல்லூரியிலும் ஹாட்லிக்கல்லூரியிலும் பயின்றார்.

தமது தந்தையாரான சோதிட விற்பன்னர் ஏ. கணபதிப்பிள்ளையிடம் இளவயதிலேயே சோதிடக்கலையை முறையாகக் கற்றுக் கொண்டார். அத்துடன் தந்தை யார் வாயிலாக இள வயதினிலேயே இராமாயணம், மகாபாரதம், ஆகிய இதிகாசங்களை இரசித்து கற்க ஆரம்பித்தார்.

இலண்டன் மற்றிக் குலேசன் இன்ரர்சயன்ஸ் (London Matriculation Inter Science) பரீட்சையில் சித்தியடைந்த தகமையுடன் தமது ஆசிரியப்பணியை தொடங்கினார். நீர்கொழும்பு புனித மரியாள் கல்லூரி, கரவெட்டி திரு இருதயக்கன்னியர் மடக்கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, நடேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றில் கணித ஆசிரியராகவும் யாழ் பரமேஸ்வராக் கல்லூரியில் கணிதவிஞ்ஞான ஆசிரியராகவும் யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் உயர்தரமான வர்களுக்குத் தமிழ் ஆசிரியராகவும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் உளவியல் விரிவுரையாளராகவும் உப அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

ஆசிரியப்பணியானது அவர் ஆற்றிய பெரும் பணிகளில் சிறு துளியெனலாம்.

சோதிடக்கலை விற்பன்னராக, வான சாஸ்திரவல்லுனராக, சிறுகதை ஆசிரியனாக, நாவல் ஆசிரியனாக, காவிய ஆசிரியனாக, இலக்கண ஆசிரியனாக, ஆய்வாளனாக எல்லாவற்றிற்கும் மேலாக கவிச்சக்கரவர்த்தியாக பல்பரிமாணங்களில் அவர் ஆக்கியளித்த நூல்களும் ஆற்றிய அரும்பணிகளும் காத்திரமும் கனதியுமானவையாகும்.

அன்னாரின் 'தண்ணீர்தாகம்' என்ற சிறுகதையானது ஈழத்து ஆரம்பகால முன்னோடி சிறுகதைகளில் புரட்சிகரமான புதுமைக் கருத்துக் களைநிலைநாட்டி முத்திரை பதித்த ஒரு சிறுகதையாகும்.

'அன்னபூரணி' என்ற இவரது நாவல் ஈழகேசரிபத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவந்தபோது அந்நவலுக்காகவே காத்திருந்து பத்திரிகை வாங்கியவர்கள் ஏராளம். அவர் ஆக்கிய 2045 கவிதைகளில்ஆன 'யாழ்ப்பாணக்காவியம்' அவரது கவித்துவ திறமைக்கோர் எடுத்துக்காட்டாகும். இக்காவிய நூல் 'வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி கலாசார அமைச்சின்' இலக்கியப்பரிசு, சம்பந்தன் விருது ஆகியவற்றினால் பெருமைப் படுத்தப் பட்ட அரும் பெரும் காவியமாகும்.

**பெற்ற பட்டங்களும் ஆக்கங்களும்**

- இலண்டன் மற்றிகுலேசன் இன்ரர் சயன்ஸ்
- பண்டிதர்-மதுரைத் தமிழ் சங்கம்
- பி.ஏ.-சிறப்பு கல்வி டிப்ளோமா-இலண்டன் பல்கலைக்கழகம்
- முதுதத்துவமாணி-இலண்டன் பல் கலைக் கழகம்
- எவ்.ஆர்.ஏ.எஸ்-இலண்டன் வானசாஸ்திரக் கழக உறுப்பினர்
- தத்துவகலாநிதி-யாழ் பல்கலைக்கழகம்.

'இலங்கைக்காவியம்' என்ற தலைப்பில் இன்னொரு நீண்ட காவியத்தையும் இயற்றியுள்ளார். இக்காவியத்தின் முதற்பகுதியானது 4486 கவிதைகளுடன் 'பருவப்பாலியர் படும் பாடு' என்றஉப தலைப்புடன் அண்மையில் வெளியிடப்பட்டது. யாழ். பல்கலைக்கழகம் அன்னாருக்கு கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கி தனது மாண்பை நிலைநாட்டியுள்ளது.

பண்டிதர் தமிழ் இலக்கியதொண்டோடு மட்டும் நிற்கவில்லை. இலக்கண விதிகளை இலகுபடுத்திஎழுதி வெளியிட்ட 'மஞ்சு காசினியம்' என்ற இலக்கணநூல் இலக்கணதமிழுக்கு அன்னார் ஆற்றிய அருந்தொண்டாகும்.

யாழ்.நூல்தந்த கிழக்கிலங்கையின் சுவாமி விபுலானந்த அடிகள் யாழ்நூலை ஆக்குவதற்கான ஆயுப் பணிகளின்போது தமிழ் நாட்டின் பல பிரதேசங்களில் உள்ள கோயில்களில் அமைந்துள்ள யாழ் சம்பந்தமான சிற்பங்களை ஆராய்ந்த போது பண்டிதர் சச்சி ஐயா அவர்களும் சுவாமிகளுடன் சென்று ஆய்வுப் பணிகளுக்கு உறுதுணையாகச் சுவாமிகளின் உதவியாளராக பணியாற்றினார். அத்துடன் 'தமிழர் யாழியல்' என்ற ஒரு நூலைப் பண்டிதர் தாமே இயற்றித் தமிழிசைத்துறைக்கும் தொண் டாற்றினார்.

### கவித்துவ கவிஞன்

பல்துறை வித்தகரான பண்டிதர் ஐயா தொட்ட துறைகளில்எல்லாம் மன்னவனாய் துலங்கினார்.

அவருக்கு கைவந்த கவிதைத்துறையில் கவிச்சக்கரவர்த்தியாய் உயர்ந்து நின்றார். செம்மொழியாம்செந்தமிழுக்கே தம்மை அர்ப்பணித்த பண்டிதர் ஐயாவின் கவிதைகளில் தமிழ் உணர்ச்சிகொப்பிளிக்கும்.

சில கவிதைகளில்சண்ட மாருதமாய்ப் புயல் வீசும், சில கவிதைகள் தென்றலாய்த் தாலாட்டும். 'ஆனந்தத்தேன்' என்ற தலைப்பில் தொகுத்து வெளியிடப்பட்ட அன்னாரின் கவிதைகள் கலைநயமும் ஓசை இன்பமும் சேர்ந்த கருத்தாலம்மிக்க அரும் பெரும் கவிதைகளாகும்.

'ஆனந்தத்தேன்' கவிதைத் தொகுப்பு நூலுக்கு 1998 இல் இலங்கைஅரசின் 'சாகித்திய மண்டல விருது' வழங்கப்பட்டமையானது பண்டிதரின் கவித்துவமேன்மைக்குசான்றாகும்.

அத்தொகுப்பில் 'தமிழ்க் கவிப்பித்து' என்ற தலைப்பில் வெளியான கவிதை தமிழ்மொழி மீது அன்னார் பூண்ட ஆராக்காதலின் அடையாள சின்னமாகும். சாகா வரம்பெற்ற அக் கவிதைகளைச் சாவதற்கு முன் ஒரு தடவையேனும் யாவரும் பருகி அனுபவிக்க வேண் டும் என்ற அவாவினால் அக்கவிதையின் ஒரு பகுதி கீழே தரப்படுகின்றது.

*லயன் மு.தர்மலிங்கம்* (J.P)
*பருத்தித்துறை.*



### தமிழ்க் கவிப்பித்து

பொன்னின் குவையெனக்கு வேண்டிய
தில்லை- என்னைப்
போற்றும் புகழெனக்கு வேண்டிய தில்லை
மன்னன் முடியெனக்கு வேண்டியதில்லை-அந்த
மாரன் அழகெனக்கு வேண்டியில்லை!

கன்னித் தமிழெனக்கு வேணுமேயடா-உயிர்க்
கம்பன் கவியெனக்கு வேணுமேயடா
தின்னத் தமிழெனக்கு வேணுமேயடா-தின்று
செத்துக் கிடக்கத் தமிழ் வேணுமேயடா!

கால்கள் குதித்து நடமாடுதேய்டா-கவிக்
கள்ளைக் குடித்த வெறி ஏறுதேயடா!
நூல்கள்கனித்தமிழில்அள்ளிட வேண்டும்-அதை
நோக்கித் தமிழ்ப் பசியும் ஆறிட வேண்டும்.

தேவர்க்(கு) அரசுநிலை வேண்டியில்லை-அவர்
தின்னும் சுவையமுது வேண்டியதில்லை
சாவிற் றமிழ் படித்துச்சாகவேண்டும்-என்றன்
சாம்பர் தமிழ் மணந்து வேகவேண்டும்!

பல்துறைவித்தகர் பண்டிதர் ஐயா அவர்கள் வாழ்ந்த போது எவ்வாறு படாடோபமற்று எளிமையாக வாழ்ந்து காட்டினாரோ அவ் வாறே வாழ்வைமுடித்த போதும் மீளாத்துயில்கொண்டு பாடையிலே படுத்துப் பகட்டின்றிப் பவனி சென்ற காட்சி அன்னாரின் மாட்சியாகும். ■

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

பண்டைக் காலத்து மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர்களுக்கு வேண்டிய மூலப்பொருட்களை சேகரிக்கும் விடயத்தில் அதிக கவனத்தைச் செலுத்தினர். பசுமையான மூலிகைகளைச் சேகரிக்குமிடத்து அவைகள் முளைத்துள்ள இடத்தின் மண்வளம், வேருடன் அவைகளைச் சேகரிக்கும் முறை,சேகரிக்கத் தகுந்த பருவநிலை முதலியவற்றை மனதில் கொண்டு செயற்பட்டனர். மூலிகைகளைச்சேகரிக்க இளவேனிற் காலம் (சித்திரை,வைகாசி) மிக உகந்த பருவமாகக் காணப்பட்டது. மூலிகைகளின் வேர்களைக் கொய்யுமிடத்து மரத்தாலான ஆயுதங்களே அவற்றிற்கான சிறந்த கருவிகளாகக் கருதப்பட்டன.

இவ்விதம் மூலிகைகளைக் கொய்ய அவற்றை அணுகுமுன் அவற்றில் குடிகொண்டுள்ள தேவதைகளை வேண்டிக் கொள்வதும், பிணியாளர்களுக்கு உதவவே அவைகளைக் கொய்வது காரணமாக அவைகள் சினங்கொள்ள வேண்டாம் என்று மூலிகைகளை வேண்டிக்கொள்வதும் முக்கிய சடங்குகளாகக் கொள்ளப்பட்டன. இது தாவரங்களுக்கு உணர்ச்சியும், சூழ் நிலைக்குத் தகுந்தவாறு செயல்படும் தன்மையும் உண்டு என இன்றைய உலகிற்கு ஜே.ஸி. போஸ் என்ற விஞ்ஞானி எடுத்து உணர்த்திய விஞ்ஞானக் கருத்தை, நம் மூதாதையர்கள் முன்பே அறிந்திருந் தனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

இதனைப் பின்வரும் பாடல் இயம்பி நிற்கின்றது.

"சித்தியாம் மூலிகையைப் பறிக்கும் முன்னே
சிறப்புடன் செடிமுன்னே நின்று
பக்தியுடன் ஓர்மூலி சர்வமூலி உயிர்மூலி
பரிவா யுன்னுயிர் உடலில் நிற்க சுவாகா என்று
நந்தியே பதினைந்து உருவே போட
நலமான சாபவிமோட் சனந்தா வாரும்"
(அகத்தியர் பன்னிரு காண்டம் -200)

(All the Siddhas constant that the herbs should be relieve of their latest impurities ritually before use)

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன்** (M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ் பல்கலைக்கழகம்,கைதடி

இப் பாடலின் படி பண்டைய தமிழர்கள் தெய்வத்திற்கு இணையாக மூலிகைகளை நினைத்துப் பேணினர் என்பது புலனாகிறது. ஆனால் தற்காலத்தில் அசுத்தமான இடங்களிலும், சனநெருக்கமான இடங்களிலும், சுடுகாடுகளிலும், தொழிற்சாலைக் கழிவு வாய்க்கால்களிற்கு அருகிலும், தெருவோரங்களிலும் மூலிகைகள் சேகரிக்கப்படுகின்றன. ஆனால் இவை பண்டைக்கால மூலிகைகளில் காணப்பட்ட இரசாயணப் பொருட்களையே தற்போதும் கொண் டிருக்கும் என்பது சந்தேகத்திற்குரியதே. ஆனால் தற்போதும் சில இடங்களில்,அதாவது காடு போன்ற சன நடமாட்டமற்ற இடங்களிலும், கோவிலைச் சுற்றி யுள்ள இடங்களிலும் மூலிகைகள் அவதானிக்கப்படுகின்றன. ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுமிடத்து மேற்படி மூலிகைகள் தரமானவையென நிரூபிக்கப்படலாம்.


சித்தமருத்துவ சிகிச்சைக்கு வயப்படக்கூடிய நோய்களில் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய மாந்தமும் ஒன்றாகும். மந்த இயல்புடைய மாந்தம், செரியாமையைக் குறிக்கும்.இதற்கு மூலிகை மருத்துவத்தின் படி உப்பிலாங்கொடி முக்கிய மூலிகையாகக் கருதப்படுகின்றது.

### உப்பிலாங்கொடி

Botanical Name- Mimosa panic ulata

Family - Leguminosae

இது வெப்பமுள்ள பிரதேசங்களில் அவதானிக்கப்படுகின்றது. இது ஏறுகொடி (Cli mber) வகையைச் சேர்ந்தது. இதன் தண்டு மெல்லியதாகவும், இலை 1/2 அங்குலம்



நீளமாகவும், முட்டை வடிவமாகவும், சிறிது தடிப்பாகவும், உடைத்தால் உடைபடுவதாகவும் இருக்கும். இது யாழ். மாவட்டத்தில் கைதடி, மட்டுவில், இளவாலை, நெல்லியடி, உடுப்பிட்டி போன்ற பிரதேசங்களில் அவதானிக் கப்பட்டது.

பயன்படும் பகுதிகள் : இலை,கொடி,வேர்

மருத்துவச் செய்கை: செரிப்புண்டாக்கி (Digestive)

வெப்பமகற்றி (Febrifuge)

பயன்கள்: 1. மாந்தத்தினால் குழந்தைகளுக்கு வயிறு உப்பிக் காணப்படின், இக் கொடியை அரையில் கட்டலாம்.

2.இதன்இலைகளை வாட்டி சாறு பிழிந்து 1/2 -1 தே.கரண்டி அளவு தாய்ப்பாலுடன் கலந்து கொடுத்துவர மாந்தக்கழிச்சல் தீரும்.

3. இலையை அரைத்து சுண்டைக்காயளவு எடுத்து, தாய்ப்பாலில் கலக்கியும் கொடுக்கலாம்.

4. இதன் இலைகளின் ஊறல் குடிநீர், மூலநோய்களில் உட்பிரயோகமாக 30ml வரை எடுக்கலாம்.

5.இதன் இலைகளை அரைத்து தீச்சுட்ட காயங்களிற்கு வெளிப்பிரயோகமாக உபயோகிக்கலாம்.

6. சமிபாடின்மையால் ஏற்படும் வாந்திக்கு, நோயாளி வாந்தி எடுத்த பின்பு, மேற்படி கொடியின் வேரை சுத்தப்படுத்தி நிழலில் உலர்த்தி பொடித்த சூரணம் 1-2ஐஜ வெந்நீரில் கொடுக்கலாம். (அ)

# படுகொலை தொடர்பில் கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை குறித்து தீவிர விசாரணை

(கொழும்பு)

அமைச்சர் பெர்னான்டோ புள்ளேயைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பில் பொலிஸாரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ள அதே வேளை, அவ்விடத்தில் அநாதரவாகக் கிடந்து மீட்கப்பட்ட தேசிய அடையாள அட்டையின் பக்கம் பொலிஸாரின் கவனம் திரும்பியுள்ளது. இந்த குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்து ஏழு குழுக்களை உள்ளடக்கிய இரகசிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச் சம்பவம் தொடர்பில் விசாரணையில் ஈடுபட்டுள்ள பொலிஸார் தாக்குதல் இடம் பெற்ற இடத்திலிருந்து மீட்கப்பட்ட தேசிய அடையாள அட்டை தொடர்பில் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர். வாழைச் சேனையை முகவரியாகக் கொண்ட22 வயதுடைய இளைஞரது அடையாள அட்டையே இவ்வாறு பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட அடையாள அட்டைக்குரிய இளைஞன் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவோ அல்லது சம்பவத்தில் உயிரிழந்தமைக்கான தடயங்களோ இல்லை என்பதினால் குறித்த இளைஞன் தொடர்பில் பொலிஸார் சந்தேகம் கொண்டுள்ளனர்.

இதனால்,குறித்த அடையாள அட்டைக் குரியவர் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குண்டு வெடிப்பில் சிக்கி உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட சடலம் ஒன்று இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் கம்பகா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இனங்காணப்படாத நிலையில் காணப்படும் இச்சடலத்துக்குரியவரின் அடையாள அட்டையாக இது இருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதனால் மீட்கப்பட்ட அடையாள அட்டை தொடர்பில் விரிவான விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து தற்கொலை குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமைக்கான சாத்தியங்களே அதிகமாக காணப்படுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அமைச்சர் ஜெயராஜின் குண்டுத்தாக்குதல் விசாரணை தொடர்பில் பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான என்.கே.இலங்கக்கோன் தெரிவித்ததாவது,

அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டிய பாதுகாப்புகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் இவ்வாறானதொரு குண்டுத் தாக்குதல் எவ்வாறு இடம் பெற்றது என்பதுகுறித்த விசாரணைகளை விஷேட பொலிஸ் குழுக்கள் முடுக்கி விட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் குறித்து கம்பகா மாவட்டத்திற்கான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் சரத் ஜயசுந்தர கூறுகையில்,

### பலகோணங்களில் விசாரணை

வெலிவேரிய பகுதியில் இடம் பெற்ற குண்டு வெடிப்பானது மரதன் ஓட்ட போட்டியாளராக வருகை தந்திருந்த தற்கொலைக் குண்டுதாரி ஒருவராலேயே மேற்கொள்ளப் பட்டுள்ளதாக இதுவரை மேற்கொண்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

ஆயினும் மேற்படி மரதன் ஓட்டப் போட்டி ஆரம்ப ஸ்தானத்திற்கு அண்மையில் பிரதான வீதிக்கு இடதுபக்கமாகவுள்ள கிறிஸ்தவ பொதுமயானத்தில் மறைந்திருந்த ஒருவர் அமைச்சர் உரிய இடத்திற்கு நெருங்கும் வரை காத்திருந்து இத்தாக்குதலை மேற்கொண்டதாக பொலிஸாருக்கு கிடைத்துள்ளது. சுமார் 23 வயது மதிக்கத்தக்க இவர் நீண்ட காற் சட்டையும் ரீ சேட்டும் அணிந்திருந்ததாகவும் தெரிய வந்துள்ளது.

அமைச்சரின் பின்னால் நின்று கொண்டிருந்த தற்கொலைக்குண்டுதாரியே குண்டினை வெடிக்க வைத்துள்ளார் என்பதற்கான ஆதாரங்களே கிடைக்கப்பெற்றுள்ளன.

சம்பவத்தில் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறுமியொரு வர் அமைச்சர் இருந்த இடத்தை நோக்கி ஒருவர் பொதியொன்றை எறிந்ததைக்கண்டதாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இச்சிறுமியின் கருத்து குறித்தும் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார் என்றார்.

இதேவேளை குண்டுத்தாக்குதலில் காயமடைந்தவர்களில் 74 பேர் கம்பகா வைத்தியசாலையிலும் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-5)

# ஐ.சி.எல் 'இருபது-20' தொடரில் 'ஐதராபாத் ஹீரோஸ்' சம்பியன்

(ஐதராபாத்)

பரபரப்பான ஐ.சி.எல். "இருபது-20" தொடரின் இறுதிப்போட்டியில் ஐதராபாத் ஹீரோஸ் அணித லாகூர் பாட்ஷாஸ் அணியை போல் அவுட் முறையில் வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

கபில் தேவ் தலைமையிலானஇந்தியன் கிரிக்கெற் லீக் (ஐ.சி.எல்) அமைப்பின் இரண்டாவது "இருபது-20" தொடர் நடந்தது. இதன் இறுதிப் போட்டியில் ஐதராபாத் ஹீரோஸ், லாகூர் பாட்ஷாஸ் அணிகள் த்குதி பெற்றன. மூன்று போட்டிகள் கொண்ட இறு திப்போட்டியில் இரண்டில். வெற்றிபெறும் அணி கோப்பை கைப்பற்றலாம். முதல் போட் டியில் ஐதராபாத் ஹீரோஸ் அணி வென்றது.

**இன்சமாம் ஏமாற்றம்**

மிக முக்கியமான இரணடாவது இறுதிப் போட்டியில் நேற்று முன்தினம் ஐதராபாத்தில் நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற லாகூர் பாட்ஷாஸ் அணி அணித்தலைவர் இன்சமாம் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். தபிக் உமர் (13) விரைவாக வெளியேறினார். இம்ரான் நசிர் (30), இம்ரான் பர்கத் (30) ஓரளவுக்கு தாக்குப்பிடித்தனர். தொடர்ந்து விக்கெற்றுகள் மடமடவென சரிந்தன. இன்சமாம் 5 ஓட்டங்களுக்கு நடையை கட்டினார். இறுதியில் லாகூர் பாட்ஷாஸ் அணி 20 ஓட்டங் களில் 9 விக்கெற்றுக்கு 130 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது.




சுலப இலக்கை விரட்டிய ஐதராபாத் ஹீரோஸ் அணிக்கு மெகர் (19), அப்துல் ரசாக் (19) நிதான ஆரம்பம் தந்தனர். தொடர்ந்து வந்தவர்கள் நவீத்-உல்-ஹசன் வேகத்தில் வீழ்ந்தனர். அம்பாதிராயுடு (46) மட்டும் தனிநபராக போராடினார். இறுதியில் 19.4 ஓவர்களில் 130 ஓட் டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையுமிழந்தது. இரு அணிகளும் ஒரே ஓட்டஎண்ணிக்கை எடுக்க போட்டி சமநிலையானது.

போல் -அவுட்: இதையடுத்து "இருபது-20" விதிமுறைப்படி போல்ட்-அவுட் (பந்துவீச்சாளர்கள் விக்கெற்றை சாய்க்க வேண்டும்) முறையில் வெற்றி நிர்ணயிக்கப்பட்டது. இதில் ஐதராபாத் ஹீரோஸ் அணியின் நிக்கி போயே, இந்தர் சேகர் ஹரிஸ் துல்லியமாக பந்துவீசி "ஸ்டம்பை தகர்த்தனர். இதையடுத்து 3-0 என்ற கணக்கில் கோப்பை வென்றது. லாகூர் பாட்ஷாஸ் சார்பில் நவீத்த ஷாஹித் நசிர் , லத்திப் ஆகியோர் வாய்ப்பை வீணாக்கினர். (5)

## நெருக்கடியில் இந்திய அணி

(டுபாய்)

கான்பூர் டெஸ்ட் போட்டியில் இந்தியா தோல்வி அடைந்ததால் தரவரிசைப் பட்டியலில் இரண்டாவது இடத்தை இழக்கும் அபாயத்தில் உள்ளது. தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 3ஆவது போட்டி கான்பூரில் வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

2ஆவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்று தொடரில் 1.0 என முன்னிலையிலுள்ளது. எனவே 3ஆவது டெஸ்ட் போட்டியை வென்றால் மட்டுமே இந்தியா தொடரை சமன் செய்யும். அந்த போட்டியில் இந்தியா வெல்ல தவறினால் டெஸ்ட் போட்டிக்கான தரவரிசைகளில் 2ஆவது இடத்தை இழக்க நேரிடும்.


தற்போது அவுஸ்திரேலியாவுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் இந்தயாவுள்ளது. கான்பூர் டெஸ்டில் இந்தியா தோல்வி அடைந்தாலோ அல்லது சமனிலை செய்யப்பட்டாலோ இந்தியா 4ஆவது இடத்திற்கு தள்ளப்படும். (5)




## முதலிடத்தை இழந்தார் சங்கக்காரா

ஐ.சி.சி.டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசை பட்டியலில் இலங்கை அணியின் முன்னணி வீரர் குமார் சங்கக்காரா முதலிடத்தை இழந்தார்.

மேற்கிந்திய் தீவுகளுடனான டெஸ்ட் தொடரில் சோபிக்க தவறியதை அடுத்தே சங்கக்காரா முதலிடத்தில் இருந்து பின்தள்ளப்பட்டுள்ளார். புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான ஐ.சி.சி.தரவரிசை பட்டியலின்படி அவுஸ்திரேலிய மத்திய வரிசை துடுப்பாட்டவீரர் மைக்கல் ஹஸி 912 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.



இதில் 893 புள்ளிகளை பெற்றுள்ள சங்கக்காரா 4ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளார். ஹஸியைத் தொடர்ந்து ஜக்கலிஸ் மற்றும் ரிக்கி பொன்டிங் ஆகியோர் தலா 899 புள்ளிகளுடன் இர்ண்டாவது இடத்தை பகிர்ந்துகொண்டுள்ளனர். (5)

## தென்னாபிரிக்க வீரர் ஸ்ரையன் முதலிடத்தில்

(புதுடில்லி)

தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரையன் பந்து வீச்சாளர்களுக்கான ஐ.சி.சி. தரவரிசையில் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார். இலங்கை அணியின் சுழற் பந்து வீச்சாளர் முரளிதரனோடு முதலி டத்தில் அவர் இடம் பெற்றுள்ளார்.

டெஸ்ட் தரவரிசை பட்டியலில் பந்து வீச்சாளர்கள் வகையில் இலங்கை அணியின் முரளிதரன் தொடர்ந்து முதலிடத்தை தக்கவைத்துக்கொண்டிருக்கிறார்.

எனினும் அண்மைக் காலமாக சிறப்பாக பந்து வீசி வரும் டெல்ஸ்ரையன் இந்தியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் மேலும் சிறப்பாக பந்து வீசி அதிக விக் கெற்றுக்களை சாய்த்தார்.

இதனையடுத்து அவர் தரவரிசையில் முதலிடத்திற்கு முன்னேறி உள்ளார். அவ ரும் முரளிதரனும் இணைந்து முதலிடத்தில் உள்ளனர். (5)

## பரிஸில் அணைந்தது ஒலிம்பிக் ஜோதி

(பரிஸ்)

பரிஸில் ஒலிம்பிக் ஜோதி அணைக்கப்பட்டது. பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்த போதும் போராட்டக்காரர்களை தடுக்கமுடியவில்லை.

அடுத்துவரும் ஓட்டங்களிலும் இது தொடருமா என்ற கேள்வி எழுந்துள்ளது. எதிர் வரும் ஆகஸ்ட் (08-24) சீனத் தலைநகர் பீஜிங்கில் 29-வது ஒலிம்பிக் போட்டி நடக்கவுள்ளது.

இதில் திபெத் மற்றும் தாய்வான் அணிகள் சேர்ந்து ஒருங்கிணைந்த சீன அணியாக கலந்து கொள்ளும் என சீனா அறிவித்தது.

இது விடுதலைகோரி போராடிவரும் திபெத்தியர்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியது. இவர்கள் மீது சீனா நடாத்திய தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் பயணத்தைத் தொடர்ந்த ஒலிம்பிக் ஜோதி நேற்று முன்தினம் பரிஸ் வந்தது. பிரபல ஈபிள் ரவர் முன்பாக பிரான்ஸ் தடகள வீரர் ஸ்டீபனே டையகானா ஓட்டத்தை ஆரம்பித்து வைப்பதாக இருந்தது.

இந்நிலையில் திபெத்தியப் போராட்டக்காரர்கள் ஜோதியைச் சூழ்ந்து கொண்டனர். இதனையடுத்து ஒலிம்பிக் ஜோதியை பாதுகாப்பு அதிகாரிகள் தாங்களே அணைத்து விட்டு பரிஸிற்கு பத்திரமாக கொண்டுசென்றனர்.

பின்னர் மீண்டும் ஓட்டம் ஆரம்பித்தது. அப்போதும் போராட்டக்காரர்கள் சூழ்ந்துகொள்ள மீண்டும் ஜோதி அணைக்கப்பட்டது. (5)

## அக்தரின் வழக்கு

# நியாயமான முறையில் கேட்டறியப்படும் - நீதிபதி

(இஸ்லாமாபாத்)

ஐந்தாண்டு தடைவிதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சோயிப் அக்தர் தொடர்பான வழக்கில் அவரது தரப்பு வாதம் நியாயமான முறையில் கேட்டறியப்படும் என்று வழக்கை விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள தீர்ப்பாயத்தின் நீதிப்தி கூறியுள்ளார்.

சர்ச்சைக்குரிய வேகப்பந்து வீச்சாளரான சோயிப் அக்தர் மீது அந்நாட்டு கிரிக்கெற் சபை ஒழுங்கு நடவடிக்கை எடுத்து ஐந்தாண்டு தடைவிதித்துள்ளது. இதனையடுத்து அக்தர் வழக்கு தொடுத்துள்ளார். இந்த மனுவை விசாரிக்க முன்னாள் நீதி பதி அப்தாப் பாரூக் தலைமையில் 3 நபர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நீதிபதி அப்தார் இந்த வழக்கு தொடர்பாக அக்தர் தரப்பு வாதங்கள் நியாயமான முறையில் கேட்டறியப்படும் என்று கூறியுள்ளார். இந்த வழக்கில் தமக்கு எந்த நெருக்கடியும் இல்லை என்று கூறியுள்ள அவர் சாட்சிகளின் அடிப்படையில் தீர்ப்பளிக்கப்படும் என்று கூறினார். (5)

# மூன்றாவது டெஸ்டிலும் ஆக்ரோஷமாக பந்துவீசுவோம்

## தென்னாபிரிக்க பயிற்சியாளர் தெரிவிப்பு

(அகமதாபாத்)

இந்தியாவுக்கு எதிரான கடைசி டெஸ்டிலும் எங்களது ஆக்ரோஷமான பந்து வீச்சு தொடரும் என தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் மிக்கி அர்தர் தெரிவித்துள்ளார்.

இந்தியா-தென்னாபிரிக்கா அணிகளிற்கிடையே சென்னையில் நடந்த முதல் டெஸ்ட் போட்டி சமனிலையில் முடிவடைந்தது. அகமதாபாத்தில் நடந்த 2ஆவது டெஸ்டில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்டது. இந்திய-தென்னாபிரிக்கா அணிகள்மேலும் 3ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி கான்பூரில் நாளை மறுதினம் ஆரம்ப மாகிறது. இந்த நிலையில் தென்னாபிரிக்க அணி பயிற்சியா ளர் மிக்கி ஆர்தர் அளித்த ஒரு பேட் டியில் கூறியிருப்பதாவது,

இந்திய அணியின் வலுவான துடுப்பாட்ட வரிசையை வீழ்த்த எங்களது ஆக்ரோஷமான வேகப்பந்து; வீச்சு திட்டம் தொடரும். கான்பூர் ஆடுகளத்தை பார்வையிட்ட பின்னர் அணியில் 2ஆவது சுழற்பந்து வீச்சாளர் சேர்ப்பது குறித்து முடிபு செய்யப்படும். கான்பூர் ஆடுகத்தில் வெடிப்பு ஏற்படும் வகையில் தயாரிக்கும் தவறை இந்தியா செய்யாது. அப்படி செய்தால் அது எங்கள் அணி வேகப் பந்து வீச்சாளர்களுக்கும் சாதகமாக அமையும்.

ஐ.பி.எல். போட்டி வருவதால் இந்திய அணி வீரர்களின் கவனம் சிதறல் ஏற்பட்டு அகமதாபாத் போட்டியில் தோல்வி கண்டதாக சொல்வது தவறானதாகும். தோல்வியை சந்திக்கும் போது இது போன்ற பிரச்சினைகள் வரும். இந்திய அணி வெற்றிபெற்றிருந்தால் இப் பிரச்சினை எழுந்து இருக்காது.

2ஆவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் டிராவிட் விக்கெற்றை வீழ்த்தியது ஆட்டத்தின் திரும்புமுனையாகும். அவரது விக்கெற்றை வீழ்த்திய ஸ்பிரை யனின் பந்து வீச்சு நம்பமுடியாத வகையில் இருந்தது. டிராவிட் நிலைத்து நின்று ஆடி ஆட்டத்தின் போக்கை மாற்றக்கூடியவர்.

**நல்ல பலன்**

சென்னை டெஸ்ட் போட்டியில் நாங்கள் பந்தை சுவிங் செய்வதில் மட்டும் கவனம் செலுத்தியது தவறாக அமைந்துவிட்டது. அதன் பிறகு சரியான அளவிலும், திசையிலும் ஆக்ரோஷமாக பந்து வீசுவது என்று திட்டம் தீட்டினோம். அதற்கு நல்ல பலன் கிடைத்தது. இந்திய துடுப்பாட்ட வீரர்களும் பிரன்ட்புட் பயன்படுத்தி சிறப்பாக ஆடக்கூடியவர்கள். எனவே அப்படி விளையாட இடம்கொடுக்காத வகையில் பந்து வீச திட்டமிட்டு செயல்படுத்தியது நன்றாக அமைந்தது.

அகமதாபாத் ஆடுகளம் நன்றாக இருந்தது. இவ்வாறு அவர்கூறினார். (5)

# ஐ.பி.எல். தொடருக்கு முன்பு டெண்டுல்கர் உடல் தகுதி பெறுவார்

## பயிற்றுவிப்பாளர் ராஜ்புத் நம்பிக்கை

இந்திய பிரிமியர் லீக் தொடருக்கு டெண்டுல்கர் உடல் தகுதி பெறுவார் என்று மும்பை இந்தியன்ஸ் பயிற்சியாளர் லால்சந்த் ராஜ்புத் தெரிவித்துள்ளார். இந்திய பிரிமியர் லீக் "இருபது - 20" கிரிக்கெற் தொடர் எதிர் வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகிறது.

காயம்காரணமாகதென்னாபிரிக்க அணிக்கு எதிரான 2ஆவது போட்டியில் ஆடாத டெண்டுல்கர் கடைசி டெஸ்டிலும் ஆட மாட்டார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது. அவர் பிரிமியர் லீக் போட்டிக்கு உடல் தகுதி பெறுவாரா? என்ற சந்தேகம் நிலவுகிறது.

**உடல்தகுதி பெறுவார்**

இந்த நிலையில் மும்பை இந்தியன் அணியின் பயிற்சியாளர் லால்சாந்த் ராஜ்புத் மும்பையில் நேற்று முன்தினம் அளித்த போட்டியில் கூறியதாவது,

டெண்டுல்கர் எந்த ஒரு போட்டியிலும் ஆடாமல் இருக்க விரும்பக்கூடிய வீரர் அல்ல. அவர் உடற்தகுதியில் பிசியோ தெரபிஸ்ட் கவனம் எடுத்துக் கொள்வார்.

பிரிமியர் லீக் போட்டிக் குள் டெண்டுல்கர் உடல் தகுதி பெற்று விடுவார் என்று உறுதியாக நம்புகிறேன். ஆரம்ப துடுப்பாட்ட வீரர் யார் ஆடுவார் என்பது குறித்து எதிரணி மற்றும் ஆடுகளத்தின் தன்மை குறித்து அறிந்த பிறகு முடிபு செய்யப்படும் இவ்வாறு அவர் கூறியுள்ளார். (5)

மானத்திற்காக அனைத்தையும் பணயம் வைக்கும் வீர–தீர–தியாக உணர்வு கொண்டவர்கள் தான், சுதந்திரத்தை எப்பொழுதுமே போராடிப் பெறுவர்.
—மகாத்மா காந்தி

வலம்புரி

# விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு அமெரிக்காவில் விரிவுபடுத்தப்படுகிறது

## வோஷிங்டனிலுள்ள இலங்கை அதிகாரிகள் குற்றச்சாட்டு

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது சார்பு அமைப்புக்களின் கிளைகளை அமெரிக்காவில் விரிவுபடுத்தி வருவதாக வோஷிங்டனிலுள்ள இலங்கை அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இக்கிளை அமைப்புக்கள் பல்வேறு நாடுகளிலும் புலிகள் அமைப்புக்காக நிதிசேகரித்தல், ஆயுதக் கொள்வனவில் ஈடுபடுதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் இலங்கை அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

விடுதலைப் புலிகளின் கிளை அமைப்புக்கள் அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ் உள்ளிட்ட முக்கிய மான12 நாடுகளில் செயற்பட்டு வருவதாகத்தெரிவித்துள்ள 'வோஷிங்டன் டைம்ஸ்' பத்திரிகை தற்போது நியுயோர்க், நியுஜெர்சி மாநிலங்களிலும் புலிகள் தமது கிளைகளை விரிவுபடுத்தி யுள்ளதாகச் செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கடந்த 1997 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்யப்பட்ட பயங்கர வாத அமைப்பாக பிரகடனப்படுத்தியது. இதனைத் தொடர்ந்து விடு தலைப் புலிகளுக்காக அமெரிக்காவில் செயற்பட்டு வந்தபல முக்கியஸ்தர்கள், அமெரிக்க பயங்கர வாதத் தடுப்புப்பிரிவுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

விடுதலைப் புலிகளுக்காக நிதி சேகரிப்பதாக குற்றச்சாட்டுக்கு இலக்கான பல அமைப்புக்கள் கடுமையான கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன. அத்தோடு புலிகள் அமைப்புக்கான நிதிசேகரித்தல் ஆயுதக்கொள்வனவு நடவடிக்கைகள் அமெரிக்க பொலிஸாரினால் முடக்கப்பட்டது.

இந்தநிலையில் விடுதலைப் புலிகளின் அரசியல்ப்பிரிவு தமது கிளைகளை அமெரிக்காவில்விரிவுபடுத்தியுள்ளதாக வோஷிங்டனிலுள்ள இலங்கை அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

விடுதலைப்புலிகள் அமைப்புக்காக நிதி சேகரித்தல், விமான எதிர்ப்பு ஆயுதங்கள், தன்னியக்க ரைபிள்கள், கிரனேற் லோஞ்சர்கள், வெடிபொருட்கள் உள்ளிட்ட நவீனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதிலும் இக்கிளை அமைப்புக்கள் ஈடுபட்டு வருவதாக இலங்கை அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-5)

# விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பெயரில் போலி வேட்பு மனுத்தாக்கல்

## அரியநேத்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மோசடியாக இடம்பெறப் போகின்றது என்பதை கட்டியம் கூறும் வகையிலேயே விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்ற கட்சியின் பெயரில் போலி வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பாக்கிய செல்வம் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மோசடியாக இடம்பெறப் போகின்றது என்பதை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்றகட்சியின் பெயரில் போலிவேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் 1989 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஆர். பிரேமதாஸாவின் காலப் பகுதியில் ஏற்பட்ட போர் நிறுத்தம், பேச்சுவார்த்தைக்குப் பின் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி எனும் கட்சி இலங்கை தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டது. இக்கட்சியின் செயலாளர் நாயகமாக அக்காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளராக இருந்த யோகரெட்ணம் யோகி நியமிக்கப்பட்டு இருந்தார்.

ஆனால் எந்த ஒரு தேர்தலிலும் இக்கட்சியினால் இன்று வரை வேட்புமனுத்தாக்கல் செய்யப்படவும் இல்லை. தேர்தல்களில் போட்டியிடவும் இல்லை.

கடந்த 3 ஆம் திகதி கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிக் கட்சியின் பெயரில் கட்சி செயலாளர் யோகரெட்ணம் யோகி என்பவரின் போலிக் கையொப்பம், போலிரப்பர் முத்திரை, போலி முகவரி என்பன வைக்கப்பட்டு போலி சமாதான நீதவான் உறுதிப்படுத்திய பின் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதுடன் வேட்பாளர்கள் அநேகமானவர்கள் சிங்களவர்களாக காணப்படுகின்றனர்.

விடுதலைப்புலிகளின் உறுப்பினராக தற்போது வன்னியில் உள்ள யோகரெட்ணம் யோகியின் கையொப்பம் வேட்பு மனுவில் வைத்து இந்த மோசடி வேட்புமனுவை இட்டதன் மூலம் எதிர் வரும் மே பத்தாம் திகதி இடம்பெற கிழக்கு மாகாணத் தேர்தல் முழுமையானமோசடித் தேர்தல் என்பது தெட்டத்தெளிவாக நிருபனமாகியுள்ளது.

இந்த சிறுபிள்ளைத்தனமான, தில்லு முல்லுத்தனமான. போலியான செயல் ஆனது அரசாங்கத்தின் ஆசிர்வாதத்துடன் செய்யப்பட்டிருப்பதை தென்பகுதியில் இயங்கும் பல அரசியல் கட்சிகளினால் சுட்டிக் காட்டப்பட்ட போதும் அரசு மௌனம்தெரிவிப்பதில் இருந்து உண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது எனத்தெரிவித்துள்ளார். (அ-5)

# சமாதானப் பேச்சினை ஆரம்பிப்பதன் மூலமே படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்

## இடதுசாரி முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சு வார்த்தையினை ஆரம்பிப்பதன் மூலமே படுகொலைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்று இடது சாரி முன்னணி தெரிவித்துள்ளது.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் படுகொலையினைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கையில் இடதுசாரி முன்னணி மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ், சிங்கள புத்தாண்டு காலப் பகுதியில் அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே பயங்கரமான முறையில் கொல்லப் பட்டுள்ளார். இவருடன் மேலும் 15 பேர் மரணத்தை தழுவி உள்ளதுடன் 80 பேருக்கு மேலானோர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பான்மையோர் பொது மக்களாவர். இன்றைய சமுதாயத்தில் காணப்படும் மிக மோசமான மிலேச்சத்தனத்தின் மேலும் ஒரு வெளிப்பாடாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது.

அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே பிரதானபாத்திரம் வகிக்கும் இந்த அரசாங்கம் இத்தகைய மிகக் கொடுமையான சமூக வெளிப்பாடுகள் அண்மைக் காலங்களில் மேலோங்கி வருவதற்குப் பொறுப்பு கூற வேண்டும்.

அரசாங்கம் தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் பேரினவாத நடவடிக்கைகளும் ஒடுக்குமுறைகளுமே தமிழ்த் தரப்பில் அரசாங்கத்திற்கு எதிராகப் பயங்கரமான யுத்தத்தைத்தொடர்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. கடந்த வாரம் அரசாங்கம் கத்தோலிக்க மக்களின் வரலாற்றுப் புகழ் மிக்க மடுதேவாலயப் பகுதியை கைப்பற்ற எடுத்த முயற்சியும் இதன் காரணத்தினால் இத்தேவாலயம் வேறு ஒரு பகுதிக்கு கொண்டு செல்ல நேரிட்டத்தையும் யாரும் மறப்பதில்லை இவற்றின் காரணத்தினால் அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே கத்தோலிக்க மக்களின் ஆத்திரத்துக்கு உள்ளாகியிருந்தார். உடனடியாக யுத்தத்தை நிறுத்தி தமிழ்த் தலைவர்களுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடுமாறு அரசாங்கத்தை வேண்டுகிறோம். அதே நேரம் தமிழ்த் தலைவர்களும் அரசாங்கம் சமாதான தொடர்பாக ஏதும் முயற்சி மேற்கொண்டால் அதற்கு உரிய சாதகமான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றோம். (அ-5)

# மடுத் தேவாலயத்தை பாதுகாக்க கிறிஸ்தவ(சிங்கள)ஆயர்கள் தவறிவிட்டனர்

வரலாற்றுப் பெருமையும், தெய்வீக பொலிவும் மிக்க மடுமாதா தேவாலயம் யுத்த மூட்டத்திற்குள் அகப்பட்டுக் கொண்டமை தெய்வீக நம்பிக்கையுடைய எவரையும் வருந்தச் செய்யும்.

இலங்கை மண்ணில் வாழ்வதற்கான காரணம் ஒன்று இருக்குமாயின் அது இறை நம்பிக்கையொன்றாகவே இருக்க முடியும்.

ஆனால் அந்த இறைநம்பிக்கைக்கும் இழுக்கு ஏற்படுத்தும் வகையில் புனித ஸ்தலங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு கட்டமாக மடு மாதா தேவாலயப் பகுதியில் இடம்பெறும் தாக்குதலைக் குறிப்பிடலாம்.

இன, மத, மொழி வேறுபாடின்றி மடு மாதாவை வழிபாடு செய்யும் உயரிய தெய்வீகத்திற்கு இழுக்குத் தேடும் வகையில் அரசின் யுத்த நடவடிக்கை அமைந்துள்ளன.

மன்னாரில் மடுமாதா தேவாலயம் அமைந்த பகுதியை புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி அந்த இடத்தை யுத்தமற்ற பகுதியாக இரு தரப்பும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற மன்னார் மறைமாவட்ட ஆயரின் வேண்டுகோளுக்கு இலங்கை அரசு உரிய மதிப்பளித்திருக்குமாயின், மடு மாதா இடம்பெயரும் பேரவலமும், மடுத் தேவாலயம் யுத்த அனர்த்தத்தில் சிக்கும் அவலமும் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும்.

எனினும் இலங்கை அரசு மடு மாதா தேவாலயத்தையும் தமிழர்களின் சொத்தாக– அவர்களின் சமய பண்பாட்டு கலாபீடமாகக் கருதியதால் அதனைப் பாதுகாக்க முன்வரவில்லை.

இதில் வேதனை என்னவென்றால் சிங்கள இனம் சார்ந்த கிறிஸ்தவ ஆயர்கள் கூட மடு மாதா தேவாலயத்தை பாதுகாக்க முன்வரவில்லை என்பதாகும்.

அதாவது அரசியலில் செல்வாக்குடைய சிங்கள கத்தோலிக்க ஆயர்கள் ஜனாதிபதியுடன், அமைச்சர்களுடன், படைத்தரப்புடன் பேச்சு நடத்தியிருந்தால், நிச்சயமாக மடுத் தேவாலயத்தை பாதுகாத்திருக்க முடியும்.

ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அவர்களிடம் மடுத்தேவாலயம் –இறை சிந்தனை என்பதை விட சிங்கள பெரும்பான்மை என்ற பேரினவாதமே புரையோடியுள்ளது.

இதனாலேயே அவர்களிடம் மடுமாதா தேவாலயத்தை காப்பாற்ற வேண்டுமென்ற உணர்வும், உத்வேகமும் ஏற்படவில்லை.

# ஓலைச் சுவடிகள் 11

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

### நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### சூரிய தரிசனம் விலக்கப்பட்ட நேரங்கள் எவை?

காலைக்கதிரவனை தரிசிப்பதற்கும், வணங்குவதற்கும், நமது கலா சாரத்தில் மிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. மாலை வேளையில் சூரியனைப் பார்ப்பதும், சூரிய ஒளியை ஏற்பதும் அழகை அதிகரிப்பதற்கு உதவும் என்று ஒரு மூதுரை உண்டு. ஆனால் சூரியனைப்பார்க் கக்கூடாத, விலக்கப்பட்ட நேரங்களைப் பற்றியும் ஆசாரியர்கள் போதித்துள்ளனர்.

"சூரியன் என்றொரு நட்சத்திரம் பூமி என்றொரு கோணம்" என்று பண்டைக் காலத்தவர் கூறியதுண்டு. இது பிரபஞ்சக்கோடியின் சாஸ்திர அறிவியலின் தத்துவத்தின் அடிப்ப டையில் கூறுவது மிகப்பண்டைக் காலம் முதல் மனித ஆராதித்து வந்த ஒன்றுதான் சூரியன். இதற்கு உதாரணமாக விளங்குவது ஒரிசா மாநிலத்தில் உள்ள கொனார்க்கில் சூரியன் கோயில்.

பூமியில் இருந்து சுமார் 15 கோடி கிலோமீற்றர்தூரத்தில் நிலைகொள்ளும் சூரியன் மிக மிக வெப்பமானது. இதன் வெப்பமானது மேற்பரப்பில் 580 கெல்வினும் மத்தியில் 15. 6 கோடி கெல்வினும் ஆகும். சுமார் 14 இலட்சம் கிலோ மீற்றர்குறுக்களவுடைய சூரியனில் ஒவ்வொரு விநாடியும்70 கோடி டன் ஐதரசன், 69.5 கோடி டன் ஹீலியமாக மாறுகின்றது. அணுப் பிளவின் (நீயுக்கிளியர் ஃபிஷன் ) விளைவாகவே சூரியனின் சக்தி உருவாகின்றது. விநாடிக்கு சுமார் 50இலட்சம் டன்சக்தி 'காமா' கதிர்களாக வெளியேறுகின்றது. 450 கோடி வருடம் வயது கணக்கிடப்பட்ட சூரியனுக்கு இனியும் 500 கோடி வருடங்கள் இவ்வாறு எரிந்து நிற்க இயலும்.

நீரில் பிரதிபலித்திருக்கும் போதும் ,நடுப்பகலிலும் சூரியனைப் பார்க்கக் கூடாது என்பது விசுவாசம். இதை விஞ்ஞானமும் ஏற்றுக்கொள்கின்றது. சூரியனைநடுப் பகலில் வெறும் கண்களால் பார்த்தால் மிக ஆபத்தான பார்வைக்கோளாறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. நீரில் பிரதிபலித்திருக்கும் சூரியன் வருண பகவானுடன் இணைந்திருப்பதால் இக்காட்சி விலக்கப்பட்டது என்று தொன்று தொட்டே நம்பி இருந்தனர்.

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திடற்புலம் அருள்மிகு ஸ்ரீ நரசிங்க வைரவர் அலங்கார உற்சவம் இம்மாதம் 16ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறும். (ச)


## எடிசன் அக்கடமி

539A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை எதிரில்)

**O/L DAY CLASS**

ஆரம்பம் :- 11.04.2008 வெள்ளிக்கிழமை 8 மணி

| | |
|---|---|
| கணிதம் | - B.P.பாஸ்கரன் |
| | - T. ரவீந்திரன் |
| விஞ்ஞானம் | - இரா.செல்வவடிவேல் |
| சமூகக்கல்வி | - R.S. சந்திரன் |
| தமிழ் | - பண்டிதர் வேலாயுதபிள்ளை |
| ஆங்கிலம் | - P.N.சுதர்சன் |
| வர்த்தகம் | - S.கிருபா |
| சமயம் | - S.வாகீசன் |

குறிப்பு :- 1. யாழ்.மாவட்டத்தில் அதிகூடிய 10 A களை கடந்த 09 வருடங்களாக தொடர்ச்சியாகப் பெற்று வரும் ஒரே நிறுவனம்.
2. இம்முறை 14 மாணவ மாணவிகள் எமது நிறுவனத்தில் 10A களை பெற்றுள்ளனர்.
3. குறுகிய காலத்தில் மொத்தம் 60 மாணவ மாணவிகள் எமது நிறுவனத்தில் 10 A களை பெற்றுள்ளனர்.

அனுமதிகளை உறுதிப்படுத்தவும்

- நிர்வாகி

(1076)



## A/L - 2010
## கலை, வர்த்தகப் பிரிவுகள்

DMI இரு இடங்களிலும்

ஆரம்பம் :- 12.04.2008 காலை 8.30

| பாடம் | நாவலர் வீதி ஆசிரியர்கள் | ஸ்ரான்லி வீதி ஆசிரியர்கள் |
|---|---|---|
| கணக்கீடு | D.Sam | D.Sam |
| வணிகக் கல்வி | பசில் | பசில் |
| பொருளியல் | ஸ்ரீ | ஸ்ரீ |
| தமிழ் | சந்திரசேகர் | மீரா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | மகிந்தன் |
| புவியியல் | பாபு | இக்னேசியஸ் |
| அளவையியல் | மோகன், பவான் | மோகன், பவான் |
| கிறிஸ்தவம் | தேவராஜா | மல்லிகா |
| அரசியல் | இளங்கோ | இளங்கோ |
| நாடகம் | கனகேஸ்வரன் | கனகேஸ்வரன் |
| வரலாறு | பத்மன் | பத்மன் |
| ஆங்கிலம் | சுதர்ஷன் | சுதர்ஷன் |
| சிங்களம் | K.R.சூரி | K.R. சூரி |

(c-974)


## மகேஸ்வரன் கொலை வழக்கு சந்தேக நபர்களுக்கு தொடர்ந்து விளக்கமறியல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் படுகொலை சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் தொடர்ந்து எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் இந்த இரு சந்தேக நபர்களையும் கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே தொடர்ந்தும் விளக்கமறியலில்வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-2)

# ஏ.பி.சி. நிறுவனத்தின் சேவைகள் அடுத்த மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

தடை செய்யப்பட்ட ஏ.பி.சி. நிறுவனத்தின் மூன்று வானொலிகள் அடுத்த மாதம் ஒலிபரப்புக்களை மேற்கொள்ளவிருக்கின்றன.

இதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிரு, சூரியன், கோல்ட், ஷா , சன் ஆகிய ஏ.பி.சியின் பண்பலை அலை வரிசைகள் தடை செய்யப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கிரு, கோல்ட், சூரியன் ஆகிய பண்பலைவானொலிகள் மட்டும் தங்களது சேவைகளை ஆரம்பிக்கவுள்ளன.

அம்பாந்தோட்டைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு தொடர்பில் தவறான செய்தியை மக்களுக்கு வழங்கி இடம்பெயர வைத்த நடவடிக்கையடுத்து இந்த வானொலிகள் தடை செய்யப்பட்டன.

ஏ.பி.சி. நிறுவனத்தின் சேவைகள் 24 பண்பலை வரிசைகளில் இடம்பெற்றிருந்தன. இந்த நிலையில் தற்போது 15 அலைவரிசைகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

ஏ.பி.சி. நிறுவனத்தின் பணிப்பாளர் றெனோய் சில்வாவின் சகோதரர் துமிந்த சில்வா ஆளும் கட்சிக்கு மாறியதையடுத்தே இந்த வானொலி சேவைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# 'கட்சி என்னைக் கொலை செய்து விட்டது'...

ஞர்களைப்போல எனது இளமைக் காலத்தை நான் அனுபவிக்கவில்லை. சிகிரியாவுக்குப் போனதும் இல்லை. சிவனொளிபாத மலைக்கு போனதுமில்லை.

ஜே.வி.பியில் இணைந்து கொண்டால் நஞ்சு குடித்துச் சாவேன் என தந்தையார் எச்சரித்தபோதும் அதனைப்பொருட்படுத்தாமல் கட்சியில் இணைந்து 20 வருடங்களுக்கும் மேலாக கட்சிக்காக அரும்பாடு பட்டு வந்ததாக விமல் வீரவன்ச தனது உரையின்போது குறிப்பிட்டார்.

மனதறிய எந்தவொரு தப்பும் செய்யாத நிலையில் கட்சியிலிருந்து தன்னை விலக்க மத்தியகுழு தீர்மானித்திருப்பதாக விமல் வீரவன்ச கூறினார். கட்சிக்காக மிகவும் அர்ப்பணிப்புடன் பாடுபட்டு சர்வதேச சக்திகள் நாட்டை ஆக்கிரமிக்க முற்பட்ட வேளை அவற்றுக்கு எதிராக போராடினேன். 2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலத்தில் கூடுதலான போராட்டங்களை நான் நடத்தியிருந்தேன்.

தற்பொழுது அந்த சக்திகளுடன் கட்சியின் சிலரும் இணைந்து என்னை கட்சியிலிருந்து நீக்குவதற்கு தீர்மானித்துள்ளனர். கட்சியின் இந்த தீர்மானமானது என்னை மனதளவில் பாரிய கவலையை ஏற்படுத்தியுள்ளது எனவும் உண்மை நிலை பற்றி மக்கள் நன்கு அறிவார்கள் எனவும் கூறியுள்ளார்.

எவ்வாறாயிருந்தாலும் சர்வதேச சக்திகளுக்கு அடிபணியப் போவதில்லையெனவும் விமல் வீரவன்ச நாடாளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையில் மேலும் தெரிவித்தார். (ச-5)







## MATHS CENTRE

M.M.N ROAD - NELLIADY

❖ வடமராட்சியில் உள்ள சிறந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.
❖ புதிய பிரிவு (கலை - 2010)

ஆரம்பம் :- 09.04.2008 புதன் A.M. 7.00

(அனுமதிகள் வழங்கப்படுகின்றன)

(c-970)


## பேச்சு...

வலகம் விடுத்த அறிக்கையிலேயே இவ் வேண்டுகோளை விடுத்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே உட்பட பிரபலமான விளையாட்டு வீரர்களின் குடும்பங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் பல பகுதிகளில் இடம் பெறும் சகல விதமான வன்முறைகளையும் பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்களையும் வன்மையாகக் கண்டிப்பதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-2)

## விசேட...

கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினரை அடையாளம் காணாத நிலையில் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-2)

## நாடாளு...

நேற்றைய நாடாளுமன்ற அமர்வுகள் 10 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து விமல் வீரவன்சவின் உரை நிகழ்ந்தது. இதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர. துணைப் பொதுச் செயலாளர் நியமனம் சட்டவிரோதமானது எனத் தெரிவித்ததையடுத்தே நாடாளுமன்றில் மீண்டும் அமளி ஏற்பட்டது. இதனையடுத்து அமர்வுகள் நிறுத்தப்பட்டன.

தம்பிக்க கிதுள்கொடவின் நியமனம் 14 நாள்களுக்கான தற்காலிகமானது எனவும் இது சட்டவிரோதம் அல்ல எனவும் சபாநாயகர் லொக்குபண்டார தெரிவித்துள்ளார். எனினும் தம்பிக்க கிதுள்கொட தமது பணிகளை நேற்று ஆரம்பித்துள்ளார். (ச-5)


## அண்மையில் வெளியான O/L பரீட்சையில்

பாராட்டி வாழ்த்துகின்றோம்

**MATHS CENTRE** க்கு பெருமை தேடித் தந்த மாணவச் செல்வங்கள்

➢ அகில இலங்கை ரீதியில் ஐந்தாம் இடத்தைப் பெற்று வடமராட்சியில் முதன்முறையாகச் சாதனை படைத்த எமது நிறுவன மாணவன் ஆ.நிதர்சனுக்கும்,

| | | | |
|---|---|---|---|
| ➢ ச.விதுரன் | 10 A | ➢ நா.பிரசாந்தி | 9 A, B |
| ➢ தெ.பிரேமினி | 10 A | ➢ ச.கிருத்திகா | 9 A, C |
| ➢ சி.சாயிதா | 10 A | ➢ கி.கௌதமி | 9 A, C |
| ➢ க.கோபிகா | 10 A | ➢ வி.அரவிந்தன் | 9 A, S |
| ➢ உ.பிரணவதர்சன் | 9 A,B | ➢ த.ஹம்சாளினி | 8 A,B,S |
| ➢ தெ.பிரணவன் | 9 A,B | ➢ அ.பிரியங்கா | 8 A, B,S |
| ➢ க.சிவ்சுதன் | 9 A,B | ➢ நா.சுவீதனா | 8 A, C,S |
| ➢ ப.நிஷானி | 9 A,B | ➢ சி.நளினா | 8 A, C,S |

இவர்களுடன் மேலும் உயர் பெறுபேறுகளைப் பெற்ற மாணவ மாணவிகளையும் வாழ்த்துவதுடன், இவர்கள் தொடர்ந்து உயர் கல்வியிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

MATHS CENTRE NELLIADY

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.

கல்வியே எங்களின் மூலதனம்

(c-973)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.